வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria Money Transfer றியா பணப்பரிமாற்றம்
Western Union Money Transfer வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 03 03.10.2022 திங்கட்கிழமை இதழ் : 298 பக்கங்கள் : 16



## திருக்கோணேஸ்வரத்துக்கு உதவ

# இந்திய அரசாங்கம் காத்திருக்கின்றது!


திருகோணமலை, ஒக்ரோபர் 03

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்திய அரசாங்கம் உதவுவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றது என இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

15

# கூட்டணியில் வேறு கட்சிகள் சேர்ந்தால் 'மான்' சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு!

■ தமிழ் மக்கள் கூட்டணியின் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம், ஒக். 03

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் வேறு கட்சிகள் சேர்ந்து தேர்தலை சந்திக்கும் பட்சத்தில் அவர்களின் கோரிக்கையை பொறுத்து மீன் சின்னத்துக்கு பதில் மான் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு உண்டு என்று அந்தக் கூட்டணியின் தலைவரும் எம். பியுமான க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

15

## மதுபானங்களின் விலையும் உயர்வு

கொழும்பு, ஒக். 03

அனைத்து வகை மதுபானங்களின் விலையையும் டி. சி. எஸ். எல். உயர்த்தியுள்ளது. இதன்படி, 750 மி. லீ. விசேட மதுபான போத்தல் ஒன்றின் விலை 150 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்புக்கு ஏற்ப ஏனைய மதுபானங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த விலையுயர்வும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## போதைப் பொருள் ஒழிப்புக்கு தனி படையணி நிறுவப்படும்!

■ நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஒக். 03

போதைப்பொருள் கடத்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் அதன் பயன்பாட்டை ஒழிப்பதற்கு புதிய படையணி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்போம் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இளைஞர் சமூகத்தை நச்சுத்தன்மையுள்ள போதைப்பொருள் மற்றும் அபாயகர ஔடதங்கள் பயன்படுத்து

15

## நப்கின்களுக்கு விதிக்கப்பட்ட சகல வரிகளும் நீக்கப்படும்!

கொழும்பு, ஒக். 03

பெண்கள், மாணவிகள் மத்தியில் சுகாதாரத்தை உறுதி செய்யவும் சுகாதார பொருட்களை குறைந்த விலையில் வழங்கும் நோக்கிலும் நப்கின் தயாரிப்புக்கான மூலப் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட அனைத்து வரிகளும் நீக்கப்படவுள்ளன.

இதேபோன்று, இறக்குமதி செய்

15



பயங்கரவாத தடுப்பு சட்டம்:

## எதிர்ப்பு போராட்டம் நேற்றுடன் அம்பாந்தோட்டையில் நிறைவு!

அம்பாந்தோட்டை, ஒக். 03

பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கையொப்பம் சேகரிக்கும் போராட்டம் நேற்று அம்பாந்தோட்டையில் நடைபெற்றது.

அம்பாந்தோட்டை தங்காலையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் மூவின மக்களும் திரண்டு போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினர்.

நேற்று நடந்த கையெழுத்துப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமை தாங்கினார். அவருடன் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, மூத்த துணைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், தொழில்சங்கப் பிரமுகர்

15

## சமூக சீரழிவு செயல்களை ஒழிக்க கோட்டை சூழலில் சுற்றிவளைப்பு!

யாழ். மாநகர முதல்வர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 03

யாழ்ப்பாண கோட்டை பகுதிகளில் அநாகரிக செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பொலிஸ், தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பகுதிகளில் திடீர் சுற்றிவளைப்பு கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண கோட்டைப் பகுதிக்கு நேற்று சென்ற மாநகர முதல்வர் அங்கு நடைபெறும் அநாகரிக செயல்கள் தொடர்பில் கேட்டறிந்

15

## பசுபதிப்பிள்ளை காலமானார்



கிளிநொச்சி, ஒக். 03

வடக்கு மாகாண சபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர் சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை நேற்று காலமானார்.

முதுமை மற்றும் மாரடைப்பு காரணமாக நேற்று அவர் உயிரிழந்தார்.

15

## சிகரெட் விலை ரூ. 5ஆல் உயர்வு

கொழும்பு, ஒக். 03

சிகரெட்டின் விலையை 5 ரூபாயால் அதிகரித்துள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 'கோல் லீவ்' சிகரெட் ஒன்றின் புதிய விலை 85 ரூபா

15

## இலங்கையின் மீறல்கள் தொடர்பில் சர்வதேச பொறிமுறையே அவசியம்!

■ அனுசரணை நாடுகளை கேட்கிறார் சம்பந்தன்



கொழும்பு, ஒக். 03

இலங்கையில் இழைக்கப்பட்டதாக கூறப்படுகின்ற மனித உரிமைகள், மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக் கூறலை செய்வதற்கான சர்வதேச சமூகத்தின் பிரசன்னத்துடனான பொறிமுறை ஒன்றை புதிய பிரேரணையில் உள்ளீர்க்க வேண்டும்

- இவ்வாறு பிரித்தானியா தலைமையிலான

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நேற்று காந்தி பிறந்த தினம் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி மட்டக்களப்பிலும் இந்தியத் தூதுவரின் பங்களிப்புடன் காந்தி நினைவு கூரப்பட்டார்.

தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தையொட்டிய சர்ச்சைகள் அடங்குகின்ற அதேவேளையில் காந்தி பற்றி ஈழ மண்ணில் நடக்கும் நினைவு வைபவங்கள் இப்போது சமூக வலைத்தளங்களில் பேசு பொருளாகியிருக்கின்றது.

இந்தவேளையில் முப்பத்தி ஐந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த ஒரு சம்பவம் இப்போது நினைவுக்கு வருகின்றது.

அப்போது இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலம்.

யாழ்ப்பாணத்தில் துப்பாக்கிகளுக்கு நடுவே பத்திரிகைகள் பணியாற்றிக் கொண்டிருந்த காலம்.

இந்திய இராணுவம் அப்போது எழுதப்படாத விதி ஒன்றை கட்டளையாக பத்திரிகைகளுக்கு விதித்திருந்தது. 'பு'னா என்ற எழுத்தும் 'லி'னா என்ற எழுத்தும் பக்கத்தில் பக்கத்தில் வரக் கூடாது அதாவது புலி என்ற சொல் எந்தக்கட்டத்திலும் பத்திரிகையில் வரக்கூடாது என்பதுதான் அவர்கள் பத்திரி கைகளுக்கு இட்ட கட்டளை.

அக்காலத்தில் ஏதாவது ஒரு செய்தியை அனுப்புகின்ற இந்தியப் படையினர், அதனை முன்பக்கத்தில் தலைப்பு செய்தியாக போடுங்கள் என்று கூறிவிட்டு செல்வார்கள். சற்று நேரத்தில் துப்பாக்கிகளுடன் வந்திறங்கும் ஒரு கட்சியினர் ஒரு செய்தியைத் தந்துவிட்டு அதுதான் தலைப்புச் செய்தியாக வர வேண்டும் என்பார்கள். அவர்கள் போன பின்னர் அங்குவரும் மற்றுமோர் இயக்கத்தினர் ஒரு செய்தியை தந்துவிட்டு அது தான் தலைப்புச் செய்தியாக வரவேண்டும் என்றுவிட்டு சென்றுவிடுவர்கள். அடுத்த நாள் பத்திரிகையில் ஒரு செய்தியைத்தானே தலைப்பு செய்தியாகப் போடலாம். பத்திரிகையில் அன்று இரவுக் கடமையில் இருப்பவர்களுக்கு கத்தியில் அல்ல துப்பாக்கிமீது நடப்பதுபோன்ற நெருக்கடி. அப்போது விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தமது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

திலீபனின் முதலாவது நினைவு நாளுக்கு முதல் நாள் மாலை. ஓர் இளைஞர் சைக்கிளில் 'ஈழநாடு' அலுவலகம் வந்திருந்தார். அவரின் சைக்கிளில் பின் 'கரியரில்' ஒரு மேசன் தொழிலாளி வேலைக்கு போகும்போது வைத்திருக்கும் பொருட்கள் கட்டி வைக்கப்பட்டிருந்தன.

'ஈழநாடு' அலுவலகத்துக்கு வேலைக்காக அப்போதுதான் இந்த ஊர்க்குருவி உள்ளே நுழைய, அவரின் சைக்கிளும் உள்ளே நுழைந்தது. அவர் ஒரு துண்டுக் காகிதத்தைத் தந்துவிட்டு அப்படியே திரும்பிவிட்டார். துண்டுக் காகிதத்தை திறந்து பார்த்தேன்.

'நாளை திலீபனின் முதலாவது நினைவுதினம். வடமாகாணம் எங்கும் பூரண ஹர்த்தால். இந்தச் செய்தியை நாளைய பத்திரிகையில் வரச்செய்யுங்கள்' என்ற சிறிய குறிப்பு மட்டுமே அதில் இருந்தது.

கொண்டுவந்தவர் யார் என்பதை அறிந்துகொள்ள ஆராய்ச்சி தேவையில்லைத்தானே.

அன்று இரவுநேர பொறுப்பாளராக இருந்த ஊர்க்குருவி, அதனையே மறுநாள் பத்திரிகையின் தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்து விட்டது.

மறுநாள் காலை, அலுவலகத்துக்கு வந்த இந்திய இராணுவ அதிகாரி, அதனை பிரசுரித்த பொறுப்பாளரை சந்திக்க வேண்டும் என்று கோரினார். அவர் அன்றும் இரவுதான் அதாவது மாலை ஆறு மணிக்குத்தான் வருவார் என்று பதிலளிக்கப் பட்டதும் அவர்கள் மறுபேச்சின்றி திரும்பி விட்டார்கள்.

சில நிமிடங்களில் அங்கு வந்த ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர், ஈழநாடு அலுவலகத்தை துவம்சம் செய்து விட்டு சென்று விட்டனர்.

மாலை ஆறு மணிக்கு ஊர்க்குருவி வந்து அலவலகத்தில் தனது ஆசனத்தில் அமர்ந்து சில நிமிடங்கள்தான் இருக்கும் அங்கே திடுதிப்பென்று நுழைந்த இந்தியப்ப டையினர், எப்படியான கோபத்தில் இருந்திருப்பார்கள் என்பதை இங்கே எழுதித் தெரியவேண்டியதில்லை என்று நினைக்கின்றேன்.

ஊர்க்குருவி, தன்னை சுதாகரித்துக்கொண்டு, முன்னால் நின்ற அந்த அதிகாரியிடம் சொன்னார், 'திலீபன் புலிகளின் உறுப்பினர் என்பதால் நீங்கள் கோபம் கொண்டிருப்பது நியாயமானதுதான். ஆனால் நான், அவர் உங்கள் காந்தியை பெருமைப்படுத்தியவர் என்பதாலேயே அவரின் அந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்தேன்", என்றேன்.

காந்திகூட தண்ணீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருக்கவில்லை. ஆனால், காந்தி காட்டிய வழியில் திலீபன் போராடி காந்தியையே பெருமைப்படுத்தினார் என்று பதிலளித்ததும், அந்த இந்திய படை அதிகாரியின் கோபம் எப்படி மறைந்தது என்பது தெரியவில்லை.

அவர் சலூட் அடிக்காத குறையாக சிரித்துக் கொண்டே அங்கிருந்து வெளியேறினார்.

திலீபன் காந்தியைப் பெருமைப்படுத்தினார் என்ற ஒரு காரணத்திற்காகவே அவருக்கு இந்திய படை அதிகாரியே மரியாதை செலுத்தியதும், இப்போது திலீபனின் நினைவஞ்சலியை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க வேண்டிய நாமே அதனை கேலிக்குரியதாக்கியதை நினைக்கவும் இந்த ஊர்க்குருவிக்கு நம் மீதே வெறுப்பு ஏற்பட்டதைத் தவிர்க்க முடியவில்லை.

- ஊர்க்குருவி

## ஆய்வுகூடங்கள், மருத்துவமனைகள் மருந்துகள் தட்டுப்பாட்டால் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 03

மருந்து பற்றாக்குறை தொடர்ந்தும் நாடளாவிய ரீதியில் ஆய்வுகூடங்கள், மருத்துவமனைகளின் நடவடிக்கைகளை பாதித்து வருகின்றது.

லேடி ரிஜ்வே வைத்தியசாலை உட்பட நாட்டின் பிரதான மருத்துவமனைகளில் தொடர்ந்தும் அன்டிபயோட்டிக்ஸ் மற்றும் வலி நிவாரணிகள் பற்றாக்குறையை எதிர் கொள்கின்றன என தெரிவித்துள்ள அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வாசன் ரட்ணசிங்கம் பஞ்சு போன்றவற்றுக்கும் தட்டுப்பாடு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சில மருத்துவமனைகள் சாதாரண சத்திரசிகிச்சைகள் குறித்து மாத்திரம் கவனம் செலுத்துகின்றன என தெரிவித்துள்ள அவர் சில மருத்துவமனைகள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான சத்திர சிகிச்சைகளை மேற்கொள்கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் முற்றாக சத்திர சிகிச்சைகளை ஒத்திவைக்காத அதேவேளை அவசர சத்திரகிசிச்சைகளை மேற்கொள்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

இலங்கை மருந்துகள் விநியோக பிரிவில் போதியளவு பொருட்கள் இன்மையே பற்றாக்குறைக்கு காரணம். பற்றாக்குறைகள் உள்ளபோதிலும் கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலை தொடர்ந்தும் இயங்குகின்றது.

நாங்கள் சில வகை மருந்துகளை கேட்டால் அவை மருந்துகள் விநியோக பிரிவில் இல்லாத நிலை காணப்படுகின்றது. ஆனால், நன்கொடைகள் காரணமாக அவை கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியா சாலையில் சில நாட்கள்வரை கிடைக்கின்றன - என்றும் கூறினார். (ஐ)

## சுற்றுலா வந்த பெண்ணுடன் சேட்டை; 9 இளைஞர்களுக்கு ஒத்திவைத்த சிறை!

யாழ்ப்பாணம், ஒக். 03

காரைநகரில் வெளிநாட்டு பெண் சுற்றுலா பயணியுடன் பாலியல் சேட்டை புரிந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 9 இளைஞர்களுக்கு ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்று தண்டப்பணம் விதித்ததுடன் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதித்தது. அத்துடன், பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்கவும் உத்தரவிட்டுள்ளது. ஸ்பெயின் நாட்டிலிருந்து காரைநகருக்கு சுற்றுலா சென்ற பெண்ணும் அவரின் நண்பரும் காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அண்மித்த பகுதிக்கு கடந்த 24ஆம் திகதி சென்றுள்ளனர்.

அப்போது அங்கு, மது போதையில் இருந்த இளைஞர்கள் அவர்களை தகாத வார்த்தையால் பேசி, பெண்ணுக்கு பாலியல் தொல்லையும் கொடுத்தனர் என்ற அடிப்படையில் 13 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 13 இளைஞர்களும் ஊர்காவற் துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் போது, 4 இளைஞர்கள் அரச தரப்பு சாட்சிகளாக மாறினர்.

ஏனைய 9 இளைஞர்களுக்கும் எதிரான வழக்கு விசாரணையின் முடிவில் அவர்களை நீதிமன்று குற்றவாளிகளாகக் கண்டது. வழக்கின் 7ஆவது குற்றவாளிக்கு, 2 வருட சிறைத் தண்டனை விதித்து அதனை 5 வருட காலத்துக்கு ஒத்தி வைத்த நீதிவான், மூன்று குற்றங்களுக்கு தலா 1500 ரூபாய் தண்டம் விதித்ததுடன் ஒரு இலட்ச ரூபாய் நஷ்டஈடு வழங்க உத்தரவிட்டார். தண்டப்பணம் கட்டத்தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத் தண்டனையும், நஷ்ட ஈட்டை கட்டத்தவறின் ஒரு வருட சாதாரண சிறைத்தண்டனையும் விதித்தார்.

வழக்கின் 2ஆம் குற்றவாளிக்கு 2 வருட சிறைத் தண்டனை விதித்து, அதனை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்த நீதிவான், 50 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு செலுத்துமாறும், இரண்டு குற்றங்களுக்கு தலா 1500 ரூபாய் அபராதம் செலுத்துமாறும் நஷ்டஈட்டை கட்டத்தவறினால் ஒரு வருட சிறைத்தண்டனையும், அபராத பணத்தை கட்டத்தவறின் ஒரு மாத சிறைத்தண்டனையும் விதித்தார்.

வழக்கின் 2ஆம் மற்றும் 7ஆம் குற்றவாளிகள் தவிர்ந்த ஏனைய ஏழு குற்றவாளிகளுக்கும், 6 மாத கால சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்த நீதிவான், இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் தலா 1500 ரூபாய் வீதம் 7 பேருக்கும் தண்டம் விதித்துடன், 20 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்க உத்தரவிட்டார். தண்டப்பணத்தை கட்டத்தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத்தண்டனையும், நஷ்டஈட்டை கட்டத்தவறின் 6 மாத கால சிறைத்தண்டனையும் விதித்தார். (ஐ)

## மின்வெட்டு தொடரும்!

கொழும்பு, ஒக். 03

தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்ட நுரைச்சோலை லக்விஜய அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி திருத்தப்பட்டு மீண்டும் தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்பட்டாலும் மின் துண்டிப்பு நேரம் குறைக்கப்படாது என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களிலும் 2 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க கூறியுள்ளார்.

இதனிடையே, எரிபொருட்களின் தரம் தொடர்பில் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் முன்னெடுக்கப்படும் பரிசோதனைகள் தொடர்ந்தும் இடம் பெறும் எனவும் அவர் கூறினார். (ஐ)

## ஈழத்தின் பிரபல நடிகர் தர்சன் காலமானார்!

கொழும்பு, ஒக். 03

பிரபல நடிகரான தர்சன் தர்மராஜ் தனது 41ஆவது வயதில் நேற்றுக் காலை காலமானார்.

மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்தார் என்று கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இறக்குவானையில் பிறந்த தர்சன் சிட்னி சந்திரசேகரின் இயக்கத்தில் உருவான "யு-9" நாடகத்தினூடாக கலைத்துறைக்குள் பிரவேசித்தார். 2008ஆம் ஆண்டு வெளியான "பிரபாகரன்" எனும் திரைப் படம் ஊடாக அவர் திரைப்படத்துறையில் காலடி எடுத்து வைத்தார்.

2013ஆம் ஆண்டு தர்சன் தர்மராஜூக்கு "இனியவன்" திரைப்படத்துக்காக 2 விருதுகள் கிடைத்திருந்தன. மாத்தா, சுனாமி, கோமாளி கிங்ஸ் உள்ளிட்ட பல தமிழ், சிங்கள மொழி திரைப்படங்களில் அவர் நடித்திருந்தார்.

யதார்த்தமான நடிப்புத் திறமைகள் நிறைந்த நடிகராக விமர்சகர்களால் தொடர்ந்து பாராட்டப்பட்ட அவர், அனைத்து தமிழ், சிங்கள ரசிகர்கள் மத்தியிலும் மிகவும் பிரபலமான கலைஞராகவும் வலம் வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
03.10.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் மக்களிடமும் மன்னிப்பு கோருவீர்களா?

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்தி விவசாயம் செய்ய முற்பட்டமை தவறானதொரு தீர்மானமென்று ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் வாரிசான நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். கட்சிக் குழுக் கூட்டமொன்றில் பேசுகின்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். கோட்டாபயவால் ஏற்பட்ட அரசியல் சரிவிலிருந்து மீண்டெழும் நோக்கிலேயே நாமல் ராஜபக்ஷ இவ்வாறான பகிரங்க மன்னிப்புக் கோரலை முன்னெடுக்கின்றார்.

இதேபோன்று தமிழ் மக்கள் தொடர்பில் இழைக்கப்பட்ட தவறுகளுக்கும் நாமல் ராஜபக்ஷ மன்னிப்பை கோருவாரா - அதற்கான அரசியல் முதிர்ச்சி அவரிடம் இருக்கின்றதா? 2009இல் யுத்தம் நிறைவுற்றதை தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அரசியல் தீர்வு தொடர்பில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. குறிப்பாக, போர் முடிவுக்கு பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுடனான சந்திப்பின்போது 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் சென்று அரசியல் தீர்வை காண்பதாக மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதியளித்திருந்தார். 13 'பிளஸ்' தொடர்பில் பேசியிருந்தார். அதேபோன்று இந்தியாவுக்கும் அவ்வாறான வாக்குறுதிகளை மகிந்த வழங்கியிருந்தார். ஆனால், எதுவுமே நடைபெறவில்லை. பண்டா - செல்வா மற்றும் டட்லி - செல்வா உடன்பாடுகள் ஒருதலைப்பட்சமாகக் கிழித்து வீசப்பட்டமை போன்றே, மகிந்த ராஜபக்ஷவின் வாக்குறுதிகளும் காணாமல்போயின.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து அவரும் தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்னைகள் தொடர்பில் பேசுவதற்குத் தயாராக இருக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் தொடர்பில் பேசினார். ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவோ, அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தையே முற்றிலுமாக இல்லாமல் ஆக்குவதற்கான வாய்ப்புகளைத் தேடினார். தன்னையொரு சிங்கள - பௌத்த தலைவராக பிரகடனம் செய்தார். இலங்கைத் தீவை ஒரு பௌத்த குடியரசாக மாற்றும் திட்டங்களை முன்னெடுக்க முற்பட்டார்.

பொருளாதாரப் பிரச்னைகள் மட்டும்தான் இருக்கின்றன. தமிழ் மக்களுக்கான பிரத்தியேக அரசியல் பிரச்னைகளென்று எதுவுமில்லை என்றார். இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஹர்ஷ வர்தன் முன்னிலையிலேயே, 13ஆவது திருத்தச் சட்டத்தில் நிறையும் குறையும் உண்டென்று கூறினார். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கோட்டாபயவின் தவறுகள் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ மன்னிப்புக் கோரியிருக்கின்றார்.

தாங்கள் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளை தீர்க்க முற்பட்டதாகவும் ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும், அண்மையில் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். அது உண்மையாயின் அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு கூட்டமைப்பின் ஒத்துழைப்பு தேவையில்லையே. ஒருவேளை கூட்டமைப்பு 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதை எதிர்த்தாலும்கூட அதனை செய்து முடிப்பதில் அரசாங்கத்துக்கு எந்தத் தடையும் இல்லையே! இப்போதும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மை பொதுஜன பெரமுனவிடம்தானே உண்டு. இந்தியா தொடர்ந்து வலியுறுத்திவரும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் இப்போதும் எந்தத் தடையும் இல்லையே! கூட்டமைப்பால் இதனை தடுக்கவும் முடியாதே! ஒருவேளை கூட்டமைப்போ ஏனைய தமிழ் கட்சிகளோ இதனை தடுக்க முற்பட்டால் பந்தை இந்தியாவின் பக்கமாக தள்ளிவிடலாமே!

உண்மையிலேயே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் நோக்கம் ராஜபக்ஷக்களுக்கு இருந்திருக்குமாயின், அதனை செய்வதில் ராஜபக்ஷக்களுக்கு எவ்வித தடையும் இருந்திருக்கவில்லை. தாங்கள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக விடயங்களை முன்னெடுத்திருந்தாலும்கூட மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் பல்வேறு பிரச்னைகளை தீர்த்திருக்க முடியும்.

# அமைச்சர்களுக்கே முதலில் புனர்வாழ்வு அளிக்கவேண்டும்!

## ஜே. வி. பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 03

புனர்வாழ்வு பணியகத்தை நிறுவுவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மக்கள் செயல்பாட்டு போராட்டகாரர்களை புனர்வாழ்வு எனும் பெயரில் நீண்டகாலம் தடுத்து வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்றும் போராட்டகள செயல்பாட்டாளர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு முன்னர் அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு புனர்வாழ்வு அளிக்குமாறும் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து கூறுகையில்,

நாம் அரசாங்கத்திடம் ஒன்றை கேட்டுக் கொள்கிற விரும்புகிறோம். போராட்டக் காரர்கள் என்ன தவறு செய்தார்கள்? போராட்டகாரர்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்களை, நாட்டை கடன் பொறிக்குள் சிக்கவைத்தவர்களை, நாட்டு மக்களை கடன் கேட்கும் நிலைக்கு கொண்டு வந்தவர்களை, மக்களை ஏமாற்றியவர்களை மற்றும் அரச சொத்துக்களை கொள்ளை அடித்தவர்களை விரட்டுவதற்கு போராடியவர்கள் அவர்களாவார்.

நாடு மற்றும் நாட்டு மக்களுடைய எதிர்காலத்திற்காக போராடியவர்கள் மக்கள் செயற்பாட்டாளர்கள். புனர்வாழ்வு அளிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு கிடையாது.

இன்று போராட்டம் தவறானது என்று கருதினால் ஜனாதிபதி ரணில் உடன் பதவி விலகி மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவி அமர்த்துமாறு கூறுங்கள். முடியாது ஏனென்றால் போராட்டம் நியாயமானது. நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டகாரர்கள் செயல்பட்டார்கள்.

உண்மையில் புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டியவர்களை அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் வைத்து கொண்டு போராட்டக்கள செயல்பாட்டாளர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்கு முனைகிறார்கள். இன்று அரசாங்கத்தில் உள்ளவர்களே புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் - என்றார். (ஐ)

# பொருளாதார நெருக்கடி தொடர்பில் மனித உரிமை குழுவும் விசாரணை!

கொழும்பு, ஒக். 03

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை கண்டறிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

பல்வேறு அரசியல் காரணங்களால் அவ்வப்போது தேசிய கொள்கைகளில் மாற்றம் கொண்டுவருவதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அமைச்சுகளின் விடயதானங்களை வகுக்கும் போது, தேசிய நலனை புறக்கணிப்பது போன்ற காரணங்களால் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கொள்கை ரீதியில் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட விதம் ஆகியன தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு, நாட்டின் பொருளாதாரத்துடன் நேரடியாக தொடர்புடைய தேசிய கொள்கைகளை அமுல்படுத்துவது தொடர்பான அமைச்சுகள் மற்றும் தற்போது செயற்படும் அமைச்சுகளிடமிருந்து அறிக்கைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இதற்கு பல பொருளாதார நிபுணர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.


பொருளாதார வீழ்ச்சியின் ஊடாக மக்களின் வாழ்வுரிமை மீறப்பட்டதன் அடிப்படையில் இந்த விசாரணை நடத்தப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இலங்கையில் இடம்பெற்ற பொருளாதார குற்றங்கள் தொடர்பான உண்மைகளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் விளக்கியிருந்தார்.

அனைத்து சமூகத்தினதும் மனித உரிமைகளை பாதித்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டுமாயின் இந்த நாட்டில் வேரூன்றியிருக்கும் ஊழல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டுமென அந்த அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் கடந்த கால மற்றும் அண்மைக்கால மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதார குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

விருப்பம் நிறைவேறும். சூழ்நிலைகளை புரிந்து கொண்டு சிந்தித்து செயல்படுவீர்கள். முயற்சி ஒன்று வெற்றியாகும். உங்களால் ஆதாயம் அடைந்தவர்கள் இன்று உங்களைத் தேடிவந்து உதவி செய்வர்.

**இடபம்**

பேச்சில் கவனம் தேவை. செயல்களில் பின்னடைவு உண்டாகும். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். உறவினரிடம் கருத்து வேறுபாடு உண்டாகும். பயணத்தில் சில நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

**மிதுனம்**

நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.தம்பதி இடையே இருந்த பிரச்னை தீரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.புதிய நட்பால் உற்சாகம் அடைவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**கடகம்**

உங்கள் திறமை வெளிப்படும் நாள்.பழைய பிரச்னை ஒன்றிற்கு தீர்வு காண்பீர்கள். மறைமுக எதிரிகள் விலகிச்செல்வர். செயல்களில் வெற்றி காண்பீர்கள். புதிய முயற்சி ஒன்று அனுகூலமாகும்.

**சிம்மம்**

குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். சுற்றி இருப்பவர்களில் நல்லவர் யார் பகைவர் யார் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

**கன்னி**

குடும்பத்துடன் வெளியூர் பயணம் மேற்கொள்வீர்கள். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். கோயிலுக்கு செல்வீர்கள். நீங்கள் எதிர்பார்த்த பணம் வந்து சேரும். கடன்கள் அடைபடும்.

**துலாம்**

முயற்சியில் இருந்த தடை விலகும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை குடும்பத்தினர் ஆதரவுடன் சரி செய்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**விருட்சிகம்**

நண்பர்களால் ஒரு முயற்சி நிறைவேறும்.தம்பதி இடையே ஏற்பட்ட பிரச்னை விலகும். புதிய முயற்சி ஒன்று நிறைவேறும். வெளி வட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். அக்கம் பக்கத்தினர் பாராட்டுவார்கள்.

**தனுசு**

மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். முயற்சியில் தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகளை சமாளித்து உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர்கள். குடும்பத்தினர் நலனில் அக்கறை அதிகரிக்கும்.

**மகரம்**

நினைத்ததை சாதிப்பீர்கள். தம்பதிகள் ஒருவருக்கு ஒருவர் அனுசரித்து செல்வதால் குடும்பத்தில் நன்மை அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள்.

**கும்பம்**

எதிர்பாராத வரவு வந்து சேரும்.வியாபாரத்தில் உங்கள் முயற்சி வெற்றியாகும். பழைய கடன்களை அடைப்பீர்கள். எதிர்பார்த்த ஒன்றில் லாபம் காண்பீர்கள். சேமிப்பில் உங்கள் கவனம் செல்லும்.

**மீனம்**

கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். காணாமல் போன ஒரு பொருள் இன்று கிடைக்கும். புதிய நம்பிக்கை உண்டாகும்.உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். பணியிடத்தில் உங்கள் திறமை வெளிப்படும்.

# அதிகாரங்களே கேட்கிறோம் பிரிவினையை கேட்கவில்லை!

## தமிழக முதல்வர் ஸ்டாலின்



திருவனந்தபுரம், ஒக். 03

“மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறோமே தவிர பிரிவினை கேட்கவில்லை,” என முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

கேரளாவின் திருவனந்தபுரத்தில் நேற்று முன்னதினம் நடந்த, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24ஆவதுமாநில மாநாட்டில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநில அரசுகளை 356ஆவது சட்டப்பிரிவை பயன்படுத்தி கலைக்கலாம் என்ற ஜனநாயக விரோத செயல் நடத்தப்பட்ட முதல் மாநிலம் கேரளா.

அந்த மண்ணில்தான் இப்போது மாநில சுயாட்சி, கூட்டாட்சியை வலியுறுத்தி, மாநாடு நடக்கிறது. ஜனநாயகத்துக்குப் புறம்பான செயலுக்கு பலியான முதல் கட்சி கம்யூனிஸ்ட். அதே 356ஆவது சட்டப்பிரிவால், இரண்டு முறை தமிழகத்தில் ஆட்சியை இழந்த கட்சி, தி. மு. க., மாநில சுயாட்சிக்காக குழு அமைத்து, இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பின் மறுஆய்வுக்கு வழிகாட்டியவர் கருணாநிதி.

“மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கிடைக்கும் வகையில், நம் அரசியல் சட்டம் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்“ என்று, 1963 ஆம் ஆண்டு ராஜ்ய சபாவில் அண்ணாதுரை பேசினார். 60 ஆண்டுகளாகியும் நிலைமை மாறவில்லை. மாநிலங்களின் அதிகாரங்களை மடை மாற்றி வருகின்றனர்.

ஜி.எஸ்.டி., வரியால் மாநிலங்களின் நிதி உரிமையும், “நீட்“ போன்ற நுழைவுத் தேர்வுகளால் கல்வி உரிமையும் பறிக்கப்படுகின்றன. நேரடியாக செய்ய முடியாத அரசியல் தலையீடுகளை, சட்டத்தின் போர்வையில் செய்யப் பார்க்கின்றனர்.

ஆளுநர்கள் வாயிலாக இரட்டை ஆட்சி நடத்தப் பார்க்கின்றனர். நம் எண்ணங்களை எம்.பிக்கள் வாயிலாக பாராளுமன்றில் குரல் எழுப்பினால், உரிய பதில் கிடைப்பதில்லை. நமக்கான உரிமைகளை நிலைநாட்ட கடிதம் அனுப்பினால், பதில்கூட வருவதில்லை.“ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே தேர்தல்” என அனைத்திலும் “ஒரே ஒரே” என சொல்கின்றனர்.

இதே நிலை தொடர்ந்தால், “ஒரே கட்சி, ஒரே நபர்” என்ற நிலை வந்து விடும். இதை விட ஆபத்து இருக்க முடியாது. ஒரே கட்சி என்ற நிலை வரும்போது, பா. ஜ. க. மகிழ்ச்சி அடையலாம். ஆனால், ஒரே நபர் என்ற நிலை வரும்போது பா.ஜ.கவினரே, நம்மோடு சேர்ந்து எதிர்க்கும் நிலை வரும்.

இந்தியாவை காப்பாற்ற வேண்டுமானால் அனைத்து மாநிலங்களையும் காப்பாற்ற வேண்டும். சுதந்திரம் அடைந்த போது, ஓராண்டுகூட ஒற்றுமையாக இருக்காது என்றனர். ஆனால், 75 ஆண்டுகளை கடந்தும் இந்தியா ஒன்றுபட்ட நாடாக இருக்கிறது. “மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி” என்பது இந்தியாவை ஒன்றுபடுத்தும் மந்திர சொற்கள். இந்த இரண்டுக்கும் குந்தகம் ஏற்படுத்துபவர்களை, இந்திய ஒருமைப்பாட்டின் எதிரிகள் என்று தான் சொல்ல வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைதான் கேட்கிறோமே தவிர, பிரிவினை கேட்கவில்லை - என்றார். (ஐ)

# மனித சங்கிலி போராட்டத்துக்கு 10 கட்சி, 13 அமைப்புகள் ஆதரவு!

சென்னை, ஒக். 03

தமிழகத்தில் சமூக நல்லிணக்க மனித சங்கிலி எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறும் என்று 10 கட்சிகள் மற்றும் 13 அமைப்புகள் கூட்டாக அறிவித்துள்ளன.

காந்தியடிகள் பிறந்த நாளான நேற்று மார்க்சிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் கட்சிகளின் சார்பில் சமூக நல்லிணக்க மனிதச் சங்கிலி நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு நாம் தமிழர் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளும், மக்கள் அமைப்புகளும் ஆதரவு தெரிவித்தன.

இதனிடையே, பி. எவ். ஐ. அமைப்பு தடை காரணமாக ஆர். எஸ். எஸ். பேரணி மற்றும் சமூக நல்லிணக்க மனித சங்கிலி ஆகியவற்றுக்கு பொலிஸ் அனுமதி மறுத்தது.

இந்நிலையில், வரும் 11ஆம் திகதி சமூக நல்லிணக்க மனித சங் கிலி நடைபெறும் என்று மார்க்சிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், ம. தி. மு. க. காங்கிரஸ் உள்ளிட்ட 10இற்கும் மேற்பட்ட கட்சிகள், 13இற்கும் மேற்பட்ட அமைப்புகள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அ. தி. மு. க. உறுப்பினருக்கு புதிய அடையாள அட்டை!

சென்னை, ஒக். 03

அ. தி. மு. க. உறுப்பினர்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்க அக் கட்சியின் இணைப் பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி முடிவு செய்து அதற்கான பணிகளையும் முடுக்கிவிட்டுள்ளார்.

அ. தி. மு. கவின் பொதுச்செயலர் தேர்தலை நடத்தக்கூடாது என்று உச்சநீதிமன்றம் இடைக்கால உத்தரவிட்டுள்ளது. இந்தத் தீர்ப்பை எடப்பாடி கே. பழனிசாமி ஏற்றுக் கொண்டது ஒருபுறம் இருக்க, கட்சிப் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

தற்போது அ. தி. மு. க. உறுப்பினர்களுக்கு புதிய அடையாள வழங்க எடப்பாடி பழனிசாமி முடிவு செய்துள்ளார். ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அ. தி. மு. க. உறுப்பினர்களுக்கு எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர் செல்வம் ஆகியோருடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

தற்போது, ஓ.பன்னீர்செல்வத்தின் படத்தை நீக்கிவிட்டு, எடப்பாடி பழனிசாமி படம் மட்டும் இடம்பெறும் வகையில் புதிய உறுப்பினர் அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அ. தி. மு. கவில் 90 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். மாவட்ட வாரியாக உறுப்பினர் அடையாள அட்டை அச்சடிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த அட்டைகளை மாவட்டச் செயலாளர்கள் மூலம் உறுப்பினர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.








# காந்தி ஜெயந்தி தினம் யாழிலும் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 03

காந்தி ஜெயந்தி தினம் நேற்று யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்திய துணைத்தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன், யாழ் மாநகர பிரதி முதல்வர், மாநகர ஆணையாளர், அரசியல் சமூக பிரதிநிதிகள், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள் மற்றும் அகில இலங்கை காந்தி சேவா சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது காந்தீயம் ஏடு யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசனால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்திய துணைத்தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார். மேலும் மகாத்மா கந்திக்கு மிகவும் பிடித்தமான "ரகுபதி ராகவ ராஜாராம்" பாடலும் மாணவர்களால் இசைக்கப்பட் டது. (ஐ)

# ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பல்கலைக்கழக மாணவன் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 03

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருளுடன் ஊவா பல்கலைகழக மாணவனையும், போதை வியாபாரி என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஊவா பல்கலைக்கழக மாணவனை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மாணவனின் உடைமையில் இருந்து 750 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவராக பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்ட 52 வயதான நபர் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார். (ஐ)

# பூநகரி கடற்றொழிலாளர்களின் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது!

கிளிநொச்சி, ஒக். 03

**உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட பூநகரி கடற்தொழிலாளர்கள் தமது போராட்ட வடிவத்தை மாற்றி நேற்று மூன்றாவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.**

பூநகரி - கிராஞ்சி இலவன் குடா கடல் பகுதியில் பாரம்பரியமாக சிறகு வலை தொழிலில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

கிராஞ்சி இலவன்குடா கடற்பகுதியில் கடலட்டை பண்ணை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இலவன் குடா கடற்பரப்பில், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உட்பட கடற்தொழிலாளர்கள், சிறகு வலை தொழிலின் ஊடாக இறால், நண்டு, மீன் போன்றவற்றை பிடிப்பதை அன்றாட வாழ்வாதார தொழிலாக பல ஆண்டுகளாக செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் தற்போது கடலட்டை பண்ணைகள் அமைக்கும் முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை தொடர்ந்து கடற்றொழிலாளர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் சாதகமான முடிவை சம்பந்தப்பட்டவர்கள் வழங்கும் வரை தாம் போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.




இந்த நிலையில், மீனவர்கள் உள்ளடங்கலாக மக்கள் முகம் கொடுத்து வரும் பல்வேறு பிரச்னைகளுக்கு கை கொடுத்து மனிதாபிமான பணியில் ஈடுபட்டு வருகின்ற மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம்உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, மீனவர்களின் பிரச்னைகளை குழுவினர் கேட்டறிந்தனர். இந்நிலையில், தமது உரிமைகளை வென்றெடுக்க உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிட்டு, தமது போராட்ட வடிவை மாற்றி சுழற்சி முறையில் போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிட்டனர்.

இந்த நிலையில் 3ஆவது நாளாக நேற்று ஞாயிற்றுக்கிழமையும் போராட்டம் தொடர்ந்தது. (ஐ)

# 100 எரிபொருள் நிலையங்களை இலங்கையில் நிறுவத் திட்டம்!

## இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனம்

புதுடில்லி, ஒக். 03

இலங்கையில் மேலும் 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவ அனுமதி கோரியுள்ளதாக புதுடில்லியில் அமைந்துள்ள இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் 211 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காணப்படுகின்றன.

இந்த விநியோக கட்டமைப்பை மேலும் விஸ்தரிக்கும் முகமாகவே புதிய 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவ அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்தியா சென்றுள்ள இலங்கை ஊடகவியலாளர்கள் குழு நேற்று டில்லியில் அமைந்துள்ள இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்திற்கு சென்றிருந்தது. இதன்போதே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் (வர்த்தகம்) சுதீப் ஜெயந்த் மேலும் கூறுகையில்,

இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் 100 புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை இலங்கையில் நிறுவுவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட எரிபொருள் தேவையை ஈடு செய்வதற்கு சிறப்பு கடன் திட்டத்தின் கீழ் 7 மில்லியன் மெற்றிக் தொன் எரிபொருளை இலங்கைக்கு வழங்கியிருந்தோம்.

இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்ற எரிபொருளால் கூடுதல் வருமானங்கள் கிடைப்பதில்லை. எவ்வாறாயினும் இந்திய அரசின் அயல் தேசத்துக்கு முதலிடம் என்ற கோட்பாட்டின் கீழ் இலங்கைக்கு டெல்லி முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்ற நிலையில் இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனமும் அவசர நிலைமையில் இலங்கைக்கு உதவுகின்றது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து எதிர்பொருள் விநியோக கட்டமைப்பு தவிர்ந்து வேறு துறைகளிலும் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றோம். குறிப்பாக திரவமாக்கப்பட்ட பெற்றோலிய எரிவாயு (எல்.பி.ஜி) துறையில் ஒன்றிணைந்து செயல்படுவது தொடர்பிலும் கவனத்தில் கொண்டுள்ளோம் - என்றும் சொன்னார். (ஐ)

# ஜனாதிபதி விசாரணை குழுக்களுக்கு 8 ஆண்டுகளில் 50 கோடி ரூபாய் செலவு

*கோட்டாபய காலத்தில் ரூ. 33.4 கோடி செலவு*

கொழும்பு, ஒக். 03

கடந்த எட்டு வருடங்களில் நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் நியமித்த, 10 விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களுக்கு ரூ. 504 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது என்ற தகவல் வெளியாகியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் இந்த தகவல் தெரியவந்துள்ளது.

கோட்டாபய தலைமையிலான பொதுஜன பெரமுன அரசின் ஆட்சிக் காலத்திலேயே இதற்காக பெரும் தொகை நிதி விரயமாக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக ரூ. 120 மில்லியன் செலவிடப்பட்டது.

பொதுவாக கண்டுபிடிப்புகள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வெளியிடும் இந்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் முடிவுகள் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. எனவே, இந்தச் செலவினங்களுக்கு பலன் கிடைத்துள்ளதா என்பதை அளவிட முடியவில்லை.

மார்ச் 3, 2015 தொடக்கம் இந்த ஆண்டு ஜூன் 30 க்கு இடையில், இந்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் செயல்பட்டன. அவற்றுக்கான பணம் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் இன்னும் அமலில் உள்ளன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2020 மற்றும் 2021 க்கு இடையில் ஐந்து விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களை நியமித்தார். அவரின் பதவிக்காலத்தில் மொத்தம் ரூ. 337 மில்லியன் செலவிடப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அரசியல் பழிவாங்கல்களை விசாரிக்கும் ஆணைக்குழு எதிரிசிங்க ட்ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் குற்றஞ்சாட்டப்பட்ட தவறுகள், முறைகேடுகள் மற்றும் முறைகேடுகள் பற்றிய விசாரணை மற்றும் அறிக்கை செய்வதற்கான ஆணைக்குழு, முந்தைய ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் கண்டுபிடிப்புகள் மற்றும் முன்னோக்கி செல்லும் வழியை மதிப்பிடுவதற்கான ஆணைக்குழு, மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்களை விசாரிக்கும் ஆணைக்குழு மற்றும் இலங்கை சுங்கத்தில் முறைகேடுகள் தொடர்பான ஆணைக்குழு ஆகியன கோட்டாவால் நியமிக்கப்பட்டன.

2015 முதல் நாட்டை ஆட்சி செய்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஐந்து ஆண்டுகளில், ஐந்து விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு, ரூ.254 மில்லியன் செலவிடப்பட்டது. (ஐ)

# அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் தவிர எதற்காகவும் பணம் அறவிடக்கூடாது!

*கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு*

கொழும்பு, ஒக். 03

**கல்வி அமைச்சால் ஒவ்வொரு பாடசாலைக்கும் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களைத் தவிர சிறுவர், ஆசிரியர் தினங்கள் உள்ளிட்ட இதர நிகழ்வுகளுக்காக மாணவர்களிடமோ அல்லது பெற்றோரிடமோ பணம் அறவிடக் கூடாது என கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க அறிவித்துள்ளார்.**

பாடசாலை மாணவர்களிடம் அங்கீகரிக்கப்படாத கட்டணங்களை பெறுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் முறைசாரா முறையில் பணம் அறவிடப்படுவதைத் தடுக்கும் வகையில் 2015/5 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய கல்வி அமைச்சின் செயலாளர், பிள்ளைகளின் கல்விக்காக கடுமையான நிதி சிக்கல்களுக்கு மத்தியில் பெற்றோர்கள் பாடுபட்டு வரும் நிலையில் இவ்வாறான பணச் செலவுகளை நிறுத்துவது அதிபர்களின் பொறுப்பு எனவும் தெரிவித்துள்ளார்.பாடசாலையில் மாணவர்களிடம் தேவையில்லாமல் பணம் கேட்டால் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டியது பெற்றோரின் பொறுப்பு எனவும் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைக் கட்டணத்தைக்கூட மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை வற்புறுத்திக் கேட்கக்கூடாது என்றும், பெற்றோரால் அந்தத் தொகையைச் செலுத்த முடியாவிட்டால் கிராம உத்தியோகத்தரிடம் சான்றிதழைச் சமர்ப்பித்து அதைச் செலுத்தாமல் இருக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கராபிட்டி சிறுவர் புற்றுநோய் பிரிவை முழுமையாக மூடுவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஒக். 03

மஹரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு மேலதிகமாக இயங்கும் சிறுவர்களுக்கான ஒரேயொரு புற்றுநோய் பிரிவான கராப்பிட்டி போதனா மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவை முழுமையாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருத்துவமனையில் சிறுவர் புற்றுநோய் மூடப்பட்டு ஒன்றரை வருடம் கழிந்துள்ள நிலையில் அதனை திறப்பதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக அங்கு சிகிச்சை பெற்ற சிறுவர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த, சிறுவர் புற்றுநோய் பிரிவில் 10 சிறுவர்கள்வரை தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் உள்ளன. இரண்டு விசேட மருத்துவ நிபுணர்கள், அனுபவம் பெற்ற பணிக்குழாமினர் கராப்பிட்டி மருத்துவமனையின் சிறுவர் புற்றுநோய் பிரிவில் கடமையாற்றியிருந்தனர்.

இந்தநிலையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் குறித்த சிறுவர் பிரிவு மூடப்பட்டது. அச்சமயம் அங்கு, 250 இற்கும் அதிகமான சிறுவர்கள் சிகிச்சைகளுக்காக பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

சிறுவர் புற்றுநோய் பிரிவு மூடப்பட்டமையை அடுத்து குறித்த சிறுவர்கள் சிகிச்சைகளுக்காக மஹரகம மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் கராப்பிட்டி மருத்துவமனையின் பணிப்பாளர் தெரிவிக்கையில், “நாட்டில் குறைந்தளவான புற்றுநோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர்களே உள்ளனர் . அவ்வாறான மருத்துவர்கள் மஹரகம மருத்துவமனையில் சேவையாற்றுகின்ற நிலையில் கராப்பிட்டி மருத்துவமனையின் சிறுவர் புற்றுநோய் பிரிவில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# சமுர்த்தி, சமூக நல திட்டங்களுக்கு கியூ. ஆர். முறைமை அறிமுகமாகிறது

கொழும்பு, ஒக். 03

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கான பல்வேறு திட்டங்களின் கீழ் நலன்புரி பொதிகளை வழங்குவதற்கு தகுதியான பெறுநர்கள் மற்றும் குடும்பங்களை அடையாளம் காண அரசாங்கம் கியூ. ஆர். குறியீட்டை அறிமுகப்படுத்தும் என்று சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த செயல்முறை எதிர்வரும்15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. எரிபொருள் விநியோகத்தில் கியூ. ஆர். குறியீடு முறை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் சமுர்த்தி, முதியோர் உதவித்தொகை, சிறப்புத் தேவையுடையவர்கள் மற்றும் சிறுநீரக நோய் வாழ்வாதாரத் திட்டங்கள் போன்ற சமூக நலத் திட்டங்களை சீரமைக்க இதே முறை பின்பற்றப்பட உள்ளது. தற்போது ஊழல் நிறைந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படும் நிலையில் மிகவும் திறமையான மற்றும் வெளிப்படையான அமைப்பை உறுதி செய்வதே இதன் நோக்கம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமூக நலத் திட்டங்களுக்கு விண்ணப்பிப்பவர்களின் விவரங்கள், தகவல் அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பின் மூலம் கணனிமயமாக்கப்பட்டு விண்ணப்பதாரருக்கு கியூ. ஆர். குறியீடு ஒதுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த செயல்முறை வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் கள அலுவலர்கள் கைபேசி மூலம் விண்ணப்பம் மூலம் தரவுகளை சேகரித்த பின்னர் விண்ணப்பதாரருக்கு கியூ. ஆர். குறியீடு அடங்கிய ஆவணம் வழங்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

டிசெம்பர் 15 ஆம் திகதிக்குள், கல்வி, சுகாதாரம், பொருளாதார நிலை, சொத்துகள், வீட்டு நிலை மற்றும் குடும்ப மக்கள்தொகை ஆகிய அளவுகோல்களின் கீழ், நலன்புரிப் பலன்கள் சபை வறுமை நிலைகளைக் கணக்கிடும்.

22 குறிகாட்டிகள் மற்றும் நலன்புரி நலன்களுக்கு தகுதியானவர்களின் பட்டியலையும், பிரதேச செயலக மட்டத்தில் வறுமை மதிப்பெண்ணையும் காட்சிப்படுத்தப் படுத்தப்படும். பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப் பட்டியல்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை விசாரித்து தீர்மானத்தை பிரதேச செயலாளர் அல்லது சபைக்கு தெரிவிப்பதற்கு சபை மேன்முறையீட்டு குழுக்களை நியமிக்கும்.

இறுதியாக அங்கீகரிக்கப்படும் பயனாளிகளின் பட்டியலை நலப் பலன்கள் சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று அதிகாரிகள் குறிப்பிட்டனர். சுமார் 39 இலட்சம் குடும்பங்கள் இந்த திட்டத்தின் கீழ் வரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)



# சமாதான நீதிவான்களால் காந்தி நினைவுகூரப்பட்டார்!

யாழ்ப்பாணம், ஒக். 03

மகாத்மா காந்தியின் 153ஆவது ஜனன தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் நினைவுகூரப்பட்டது.

மகாத்மா காந்தியின் ஜனன தினத்தை முன்னிட்டு இலங்கை சமாதான நீதிவான்கள் பேரவையினரால் யாழ். நகரின் மத்தியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

காலை 7.30 மணிக்கு இடம்பெற்ற நிகழ்வில் சமாதான நீதிவான்கள், பேரவையின் ஆளுநர் சபையின் பணிப்பாளர் சத்தியகுமாரன் போல் தர்ஷன், யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் மற்றும் பேரவையின் அங்கத்தவர்கள் பங்கு பற்றினர். (ஐ-3)

# சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்!

## எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்து



கொழும்பு, ஒக். 03

ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு எனவும், இலவச கல்வி பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் சாசனம் இன்னும் கூடிய ஈடுபாட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு பேருந்து ஒன்றை கையளிக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது, போசாக்கு குறைபாடு காரணமாக சிறுவர்கள் பல கடுமையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. ஜனாதிபதி, பிரதமர் பதவிகள் போன்ற வரப்பிரசாதங்கள் எதுவுமின்றி ஐக்கிய மக்கள் சக்தி மக்கள் சார் செயல்பாடுகளை முன்னெடுக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தி என்பது சம்பிரதாய ரீதியான எதிர்க்கட்சி அல்ல எனவும் கூறினார். (ஐ)

# மீண்டும் கிடைத்துள்ள வாய்ப்பை தமிழ் தரப்புகள் தவறவிடக்கூடாது

## தேசிய பேரவையில் இணைய அழைக்கிறார் டக்ளஸ்

கொழும்பு, ஒக். 03

**தேசிய பேரவையில் தமிழ்த் தரப்புக்களும் பங்கேற்க வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.**

1987ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தாது எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டு வரும் தமிழ்த் தரப்புக்கள் மீண்டும் கிடைத்தள்ள வாய்ப்பை இழந்து விடக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பேரவையின் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றிருந்த நிலையில், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் விடுதலை கூட்டணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் யாரும் அதில் பங்கேற்றிருக்கவில்லை.

இந்நிலையில் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் தமிழ்த் தரப்புக்களின் போராட்டத்திற்கு உரிய தீர்வு கிடைப்பதற்கான சாத்தியமான எந்தவொரு விடயங்களையும் எதிர்மறையாகவே கருதுகின்றார்கள்.

இதனால், பிரச்சினைகள் தீர்க்கப்படாது நீடித்துக் கொண்டே இருக்கின்றது. இதற்கு அவர்களின் சுயலாப அரசியலே காரணமாகின்றது. பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் அவர்களால் அரசியல் களத்தில் நிற்கமுடியாது என்பதற்காகவே எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்ட வண்ணமுள்ளனர்.



தென்னிலங்கையின் எந்தவொரு தலைவர்களும், தனி நாட்டிற்கான கோரிக்கையை அங்கீகரிக்கப்போவதில்லை. ஆகவே, குணாம்ச ரீதியான அணுகுமுறைகள் ஊடாக பிரச்னைகளுக்கு தீர்வை காண்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அதற்காக, கிடைக்கும் வய்ப்புக்களை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. 1987ஆம் ஆண்டிலிருந்து வாய்ப்புக்களை எதிர்மறையாக விமர்சித்து தவறவிட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த் தலைமைகள், தற்போது உருவாக்கப்பட்டுள்ள தேசிய பேரவையில் பங்கேற்க வேண்டும். இந்த தேசிய பேரவையானது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிந்தனையில் தோற்றம் பெற்றுள்ளது.

ஆகவே, நிச்சயமாக பிரச்னைகளுக்கான தீர்வை அடைவதற்கான வழிகளை எட்டுவதற்கு வாய்ப்பாக இருப்பதற்கு அதிகளவான சாத்தியப்பாடுகள் உள்ளன. அதனடிப்படையிலேயே தமிழ்த் தலைமைகள் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். அதனடிப்படையில் தற்போது ஏற்பட்டுள்ள தேசிய பேரவையில் வாய்ப்பை சாதகமாக்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# சமுதாய சமையலறை முன்னோடி கருத்திட்டம்!

கொழும்பு, ஒக். 03

ஜனாதிபதியின் கொள்கை திட்டங்களில் ஒன்றான சமுதாய சமையலறை முன்னோடி கருத்திட்டம், சர்வதேச சிறுவர் தினத்தையாட்டி கொழும்பு கொம்பனி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போசாக்குக் குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள 5 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் போசாக்கு தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, முதல் கட்டமாக கொழும்பு, ஹூனுப்பிட்டிய கங்காராம விகாரையை மையமாகக் கொண்டு சமுதாய சமையலறை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காக, கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தின் சமுதாய பொலிஸ் பிரிவு மற்றும் சுற்றாடல் பிரிவு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளது.

அத்துடன், கொழும்பு மாநகரசபை, கொழும்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, லிபரல் சகோதர அமைப்பு, சர்வதேச ரொட்ரிக் கழகம் உள்ளிட்ட பல நிறுவனங்கள் இதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளன.

குறித்த முன்னோடி கருத்திட்டம் கொம்பனிதெரு பொலிஸ் பிரிவில் கொம்பனி தெரு, வேகந்த, ஹூனுப்பிட்டிய, இப்பன்வில மற்றும் காலி முகத்திடல் ஆகிய 05 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய 350 குடும்பங்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (கே)

# கொள்ளையருக்கு வைத்த குறி; பெண்ணின் உயிரை பறித்தது!

கொழும்பு, ஒக். 03

கொள்ளையருக்கு இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் குறி தவறி பெண் ஒருவர் மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை கம்பஹா தனோவிட்ட பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில், 29 வயதான பெண் உயிரிழந்தார்.

தனோவிட்ட நகரில் உள்ள மதுபான விடுதியில் கொள்ளையடிக்க வந்த சந்தேக நபர்கள்மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில், பஸ்ஸின் பின் ஆசனத்தில் இருந்த பெண் படுகாயமடைந்து வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்நிலையில், துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியில் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர். எவ்வாறாயினும், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சந்தேக நபர்கள் கொள்ளைக்காக வந்த வாகனத்துடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

# சஹ்ரான் மனைவியின் வாக்குமூலத்தின் உண்மை நிலை குறித்து விசாரிக்க முடிவு

கல்முனை, ஒக். 03

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான தற்கொலை குண்டுதாரி சஹ்ரான் காசிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் சுயாதீனத் தன்மை குறித்து தீர்மானிக்க உண்மை விளம்பல் விசாரணை ஒன்றை முன்னெடுக்க கல்முனை மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாத தடை சட்டத்தின் 8 ஆம் அத்தியாயத்தின் கீழ் கோட்டை நீதிவானிடம் வழங்கப்பட்டுள்ள குறித்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் சுயாதீன தன்மையை, அப்துல் காதர் பாத்திமா ஹாதியா சார்பில் மன்றில் ஆஜராகும் சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் சவாலுக்கு உட்படுத்திய நிலையிலேயே, இந்த உண்மை விளம்பல் விசாரணையை முன்னெடுக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அவ்வாறான விசாரணை ஒன்றுக்கு வழக்குத் தொடுநர் சட்ட மா அதிபர் தரப்பும் எதிர்ப்பு வெளியிடாத நிலையில், இந்த வழக்கில் ஒரே ஒரு சான்றான ஒப்புதல் வாக்கு மூலம் தொடர்பில் உண்மை விளம்பல் விசாரணையை முன்னெடுக்க நீதிமன்றம் தீர்மானிப்பதாக கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயராம் ட்ரொஸ்கி அறிவித்தார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதிக்கும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சாரா ஜஸ்மின் என்றழைக்கப்பட்ட புலஸ்தினி மகேந்திரன் என்பவர் வெடிபொருட்களை தயாரித்தமை மற்றும் அவற்றை சேகரித்து வைத்திருந்தமை தொடர்பில் நிந்தவூரில் வைத்துஅறிந்திருந்தும் (சாரா ஜெஸ்மின் தெரிவித்தன் ஊடாக) , அந்த தகவலை பொலிஸாருக்கு அறிவிக்காமை குறித்து பாத்திமா ஹாதியாவுக்கு எதிராக பயங்கரவாத தடை சட்டத்தின் 5ஆம் அத்தியாயத்தின் அ, ஆ பிரிவுகளின் கீழ் குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எச்.சி. 653/ 21 எனும் குறித்த குற்றப் பகிர்வுப் பத்திரம் கடந்த 2021 நவம்பர் 12ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்தக் குற்றப் பகிர்வுப் பத்திரத்தில் , கோட்டை முன்னாள் நீதிவான் ரங்க திஸாநாயக்க, சி.ஐ.டி. அதிகாரிகள், ஒரு சிப்பாய் உள்ளடங்கலாக 30 சாட்சியாளர்கள் பட்டியலிடப் பட்டுள்ளதுடன், சான்றாவணமாக ஒரே ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் மட்டும் நிரலிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலக சுற்றுலா தினம் யாழில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 03

யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மத்திய கலாசார நிதியத்தின் அனுசரணையுடன் உலக சுற்றுலா தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

உலக சுற்றுலா தினத்தை முன்னெடுக்கும் முகமாக யாழ். பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக கல்லூரியின் சுற்றுலாத்துறை மாணவர்களுக்கு, சுற்றுலாத்துறையின் ஒரு பகுதியாகவும் அழிந்து செல்வதாகவும் காணப்பட கூடிய தொட்டுணர முடியாத மரபுரிமைகளை மையப்படுத்திய பயிற்சி பட்டறையும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறை முன்னாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், பேராசிரியர் சிவலிங்கராஜா, யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரி பா.கபிலன், மத்திய கலாச்சார நிதியத்தின், யாழ். பல்கலைக்கழக கலாசார சுற்றுலாத்துறை மாணவர்கள், பல்கலைக்கழக கல்லூரி மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-3)

# ஜெனீவாவுக்குச் செல்பவர்கள் துரோகிகளா?

## பூச்சாண்டிகளை விடுத்து ஆதரவு வழங்கவேண்டும்!



ருக்கி பெர்னாண்டோ



**“உண்மையையும் நீதியையும் கோரி ஜெனீவா செல்லும் இலங்கையர்கள் தொடர்பில் பூச்சாண்டி காட்டுவதை விடுத்து அரசியல்வாதிகள், ஊடகங்கள், சமயத் தலைவர்கள், நிபுணர்கள், கலைஞர்கள் போன்றவர்கள் அவர்களது கவலைகளை உணர்ந்து அவர்களின் போராட்டங்களுக்கு தார்மீக ஆதரவை வழங்க வேண்டும்.**

“ஜெனீவா தீர்மானங்களுடன் இலங்கையின் கடந்த காலமும் எதிர்காலமும்” என்ற தலைப்பிலான எனது கட்டுரை போர் முடிவடைந்ததன் பின்னரான காலப்பகுதியில் இலங்கை நிலவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஆகியவற்றின் வகிபாகங்கள் குறித்து எடுத்தியம்புகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பிலான வரைவுத் தீர்மானம் மற்றும் அதனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் இருந்து சில கருத்துக்களையும் நான் குறிப்பிட்டேன்.

காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட 10 ஆண்டுகளுக்கும் மேலாக நீதி கேட்டு ஜெனீவாவுக்கு சென்றதை நினைவு கூர்ந்து, இன்னும் எத்தனை ஆண்டு காலத்துக்கு அவரும் அவரைப் போன்றவர்களும் ஜெனீவாவுக்குச் செல்ல வேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது என வினவியது அந்த கலந்துரையாடல்களில் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக இருந்தது. முதன்முதலில் இலங்கையிலிருந்து ஜெனீவாவுக்குச் சென்ற காணாமலாக்கப்பட்டோர் குடும்ப உறுப்பினர்களில் சந்தியா எக்னெலிகொடவும் ஒருவர் ஆவார். அதன் பின்னர் பல இலங்கையர்கள் தமது குறைகளையும் கோரிக்கைகளையும் ஜெனீவாவுக்கு எடுத்துச்செல்லத் தொடங்கியுள்ளனர்.

2000 நாட்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமலாக்கப்பட்ட தமிழ்க் குடும்பங்கள், 2006ஆம் ஆண்டு திருகோணமலை கடற்கரையில் கொல்லப்பட்ட மாணவனின் தந்தையான கலாநிதி காசிப்பிள்ளை மனோகரன், இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து காணிகளை மீட்பதற்காகப் போராடும் சமூகத்தலைவர்கள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு, துன்புறுத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் தன்னிச்சையான கைதுகளுக்கு உள்ளான செயற்பாட்டாளர்கள் ஆகியோர் நீதி கேட்டு ஜெனீவாவிற்குச் சென்றுள்ளனர். இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து பேசுவதற்காக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜெனீவாவுக்குச் செல்கின்றனர். 1990களின் முற்பகுதியில் ஜெனீவா சென்ற முன்னாள் ஜனாதிபதியாக, பிரதமராக இருந்தவரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது நண்பரான முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார ஆகியோர் ஆரம்ப காலத்தில் ஜெனீவா சென்ற எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவர்.

கடந்த வாரம் முதன்முறையாக ஜெனீவா சென்றவர்களில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் உண்மை மற்றும் நீதிக்காக குரல் கொடுத்து வரும் பிரபல இளம் கத்தோலிக்க செயற்பாட்டாளரான ஷெஹான் மாலக்கவும் கைது உட்பட பல்வேறு பழிவாங்கல்களுக்கு ஆளானவர் ஆவார். கடந்த வாரம் முதன்முறையாக ஜெனீவாவுக்குச் சென்ற மற்றுமொருவர் ‘அறகலய’வில் முக்கியமானதொரு பங்காற்றிய மனித உரிமைச் சட்டத்தரணியான நுவன் போபகே ஆவார். இவர் ‘அறகலய’ தொடர்பாக கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைக்கப்பட்ட பலர் சார்பாக சட்ட உதவிகளை வழங்கியிருந்தார். ஜூலை மாதம் அமைதியான




போராட்ட தளத்தில் நடந்த தாக்குதலின் போது மற்றொரு நபரை பாதுகாக்க முயன்றபோது போபகேயும் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தார்.

குறைந்தபட்சம் ஒரு பௌத்த பிக்கு மற்றும் கிறிஸ்தவ மதகுருமார் உட்பட சமயத் தலைவர்களும் ஜெனீவாவிற்குச் சென்றுள்ளனர். ஜெனீவா சென்ற மிக முக்கியமான சமயத் தலைவர் கொழும்பு மறைமாவட்டத்தின் கத்தோலிக்க பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் அவர்கள் ஆவார். இந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரை கர்தினால் ரஞ்சித் சந்தித்ததோடல்லாது ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையில் உரையாற்றி கடந்த ஆண்டு (2021) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் தொடங்கப்பட்ட சாட்சியங்கள் சேகரிப்பினை தொடர்ந்தும் முன்கொண்டுசெல்லவும், உயிர்த்த ஞாயிறு படுகொலைகளின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொணர்வதற்கான பாரபட்சமற்ற ஒரு விசாரணையை உறுதி செய்யவும் ஆதரவு வழங்குமாறு கோரினார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் 2012 ஆம் ஆண்டில் ஒரு தமிழ் கத்தோலிக்க ஆயர் மற்றும் மதகுருக்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் எழுதி போர்க்கால அட்டூழியங்கள் குறித்து சர்வதேச விசாரணைகளைக் கோரியபோது, இதே கர்தினால் ரஞ்சித் அவர்கள் “ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் ஒரு தீர்மானத்தை முன்வைப்பதன் ஊடாக மேற்கத்திய நாடுகள் இலங்கையின் இறையாண்மையில் தலையிடுவதாக” குற்றம் சாட்டியிருந்தார். மேலும் இது இலங்கையர்களது “நுண்ணறிவுக்கு ஓர் அவமதிப்பு” எனவும் அவர் கூறினார்.

குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில், மேலே குறிப்பிடப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் உடனடி விசாரணை ஆணைக்குழுக்கள், காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம், மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் துறை மற்றும் நீதித்துறை போன்ற உள்நாட்டு செயன்முறைகளில் நேரம், ஆற்றல் மற்றும் பணத்தை முதலீடு செய்தவர்கள் ஆவர். அவர்கள் உள்நாட்டு ஊடகங்கள், அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளுடன் உண்மையையும் நீதியையும் கோருவதில் ஈடுபட்டுள்ளனர். வெறும் உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் உண்மையையும் நீதியையும் தேடுவதில் உள்ள சிரமங்களை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நிகழ்ந்து இரண்டே ஆண்டுகளில் அவர் உணர்ந்தது போல், உண்மை மற்றும் நீதியைப் பெற சர்வதேச உதவியை நாடுவது குறித்தும் கர்தினால் ரஞ்சித்தின் இதயத்தில் ஒரு மனமாற்றம் நிகழ்ந்திருக்கக்கூடும்.

இதுவே தமிழ் கத்தோலிக்க மதகுருமார்களும், சந்தியா எக்னெலிகொட போன்ற காணாமலாக்கப்பட்டவர்களது குடும்பங்களும், 2000 நாட்களுக்கும் மேலாக போராட்டம் நடத்தி வரும் தமிழர்களும் பல ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து கொண்ட உண்மையாகும்.

(08 ஆம் பக்கம் பார்க்க...)

# ஜெனீவாவுக்குச் செல்பவர்கள் ...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

முக்கியமாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் இலங்கையினுள் உண்மையையும் நீதியையும் பெற இயலாத நிலைமை மற்றும் உள்நாட்டு செயற்பாடுகளில் மக்கள் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பை இழந்தமையே பல இலங்கையர்களை ஜெனீவாவின் புறமாகத் தள்ளுகிறது.

**ஜெனீவா எதனை வழங்குகிறது?**

அவர்களது ஏமாற்றம், கோபம், உள்நாட்டு செயன்முறைகளில் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு இன்மை ஆகியன ஜெனீவாவுக்குச் செல்வதற்கும் ஏனைய சர்வதேச ஈடுபாடுகளுக்குமான காரணங்கள் புரிந்துகொள்ளக்கூடியனவாக இருப்பினும், அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை போன்ற ஐ.நா. செயன்முறைகளில் முதலீடு செய்த நேரம், ஆற்றல் மற்றும் பணத்தின் மூலம் என்ன பெற்றார்கள் என்பது குறித்து தெளிவில்லை.




ஜெனிவாவில் மேற்கூறிய பல முயற்சிகளுடன் நான் தொடர்புபட்டுள்ளேன். பல ஆண்டுகளாக அவர்கள் அனைவரும் செவிமடுக்கப்பட வேண்டும் என ஏங்குவதை நான் உணர்ந்திருக்கிறேன். அதனால்தான், உரிமை மீறல்களின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்ட ஒருவரது குடும்பம், மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் போன்றோர் கர்தினால் ரஞ்சித் அவர்கள் மார்ச் மாதம் செய்தது போல, போபகே கடந்த வாரம் செய்தது போல ஐ.நா. சபையில் முறைசார் அமைப்பில் ஐ.நா. மனித உரிமை பேரவையிலும் சந்தியா எக்னெலிகொட செய்தது போல முறைசாரா நிகழ்வுகளிலும் இன்னும் அநேகர் செய்தது போல இராஜதந்திரிகளுடனும் ஐ.நா அதிகாரிகளுடனும் ஜெனிவாவில் நடந்த மற்ற நிகழ்வுகளிலும் பேசுகின்ற வாய்ப்பைப் பெறுவது மிகவும் முக்கியமானது. முதல் கலந்துரையாடலின் முடிவில் சந்தியா எக்னெலிகொடவின் உளப்பூர்வமான கருத்துக்கள் இலங்கையர்கள் உட்பட அந்த அறையில் இருக்கும் இராஜதந்திரிகளுக்கும் ஒரு மனப்பதிவை ஏற்படுத்தியிருக்கும் என நான் நம்புகிறேன்.

ஐ.நா. போன்ற அரசுகளுக்கிடையேயான அமைப்புகளில் சர்வதேச அரசியல் நிலவுவதை தவிர்க்க முடியாது என்ற போதிலும், சந்தியா எக்னெலிகொட மற்றும் அவரைப் போன்றவர்களது உணர்வுகள், மனக்குமுறல்கள் மற்றும் கோரிக்கைகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் (மற்றும் 2010-2011 காலப் பகுதியின் ஐ.நா. பொதுச் செயலாளரின் நிபுணத்துவக் குழாம் உள்ளிட்ட முன்னைய அமைப்புகளின்) அறிக்கைகளிலும் குறைந்த அளவில் ஐ.நா. மனித உரிமை பேரவையிலும் தீர்மானங்களிலும் பிரதிபலிக்கின்றன. உயிர் பிழைத்தவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் அனுபவங்களையும் உணர்வுகளையும் நெருக்கமாகப் பிரதிபலிக்கும் ஒரு கதையை அவை உலகிற்கு முன்வைப்பதோடு, அது இலங்கை அரசாங்கத்தின் கதையிலிருந்து மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது.



உதாரணமாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் போருக்குப் பிந்தைய மிகப்பெரிய படுகொலை எனவும், ஒரு "பெரும் அரசியல் சதி" எனவும் குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும் 2020 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் எழுத்துமூலமான இற்றைப்படுத்தலிலோ, 2021 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட விரிவான அறிக்கையிலோ இந்த தாக்குதல்கள் தொடர்பான தெளிவான குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களின் சில முனைப்புடன் கூடிய பரப்புரைகளுக்குப் பிறகு, 2021 செப்டெம்பர் மாதம் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் வாய்மொழி மூலமான புதுப்பிப்பில் ஒரு சிறு குறிப்பும், 2022 மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையின் எழுத்துமூலமான இற்றைப்படுத்தலில் மேலதிகமான விரிவான குறிப்பும் இடம்பெற்றிருந்தன.

2022 செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் விரிவான அறிக்கையில் "ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான தொகுதிகளும் பொதுமக்களுக்கு கிடைக்கப்பெற வேண்டும்" மற்றும் "சர்வதேச உதவியுடன் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முழுப் பங்கேற்புடன் இன்னும் சுயாதீனமான மற்றும் வெளிப்படையான விசாரணையைத் தொடர வேண்டும்" ஆகிய கோரிக்கைகள் உட்பட மிகவும் வலுவானதொரு குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் ஏமாற்றமளிக்கும் வகையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உண்மையும் நீதியும் இல்லாதது குறித்து தற்போது நடைபெற்று வரும் இலங்கை தொடர்பான வரைவுத் தீர்மானத்தில் எந்தக் குறிப்பும் இல்லை. இதனால்தான் தாக்குதல்கள் தொடர்பான முழுமையான உண்மையையும், நீதியையும் முன்னெடுப்பதில் உறுதியாக உள்ளவர்கள் இவ்விடயம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை பேரவையின் கவனத்தை ஈர்ப்பதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இன்னுமொரு உதாரணமாக "அமைதியான போராட்டங்கள் மூலமாக ஜனநாயக முறைமைகளை வலுப்படுத்துதல், திறம்படச் செயற்படுத்துதல், ஜனநாயகச் செயன்முறைகளின் வளர்ச்சி மற்றும் சட்டவாட்சி ஆகியவற்றுக்கு சாதகமான பங்களிப்பை வழங்க முடியும்" என்பதையும், "அமைதியான போராட்டங்களில் பங்கேற்பது, அமைதியான முறையில் ஒன்றுகூடலுக்கான சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், ஒன்றிணைந்து செயற்படல் மற்றும் பொது விவகாரங்களை நடத்துவதில் பங்கேற்பதற்கான சுதந்திரம் என்பனவற்றுக்கான உரிமைகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு முக்கிய வடிவமாகும்" என்பதையும் வலியுறுத்தி இலங்கையில் (முன்னாள் ஜனாதிபதிகள் கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான) ஊழல், இனவெறி மற்றும் சர்வாதிகாரம் நிரம்பிய ராஜபக்ஷ ஆட்சியை அகற்றிய சமீபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வரைவுத் தீர்மானம் அங்கீகரித்தமையைக் குறிப்பிடலாம்.

மேலும் இந்த வரைவுத் தீர்மானம் ஆழமான இராணுவமயமாக்கல், நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தண்டனையின்மை உட்பட தற்போதைய நெருக்கடிக்கு பங்களித்த ஆட்சி முறை சார் காரணிகள் மற்றும் அடிப்படையான காரணங்களை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தையும் ஒப்புக் கொண்டுள்ளது.

ஐ.நா. தீர்மானங்கள் மற்றும் அறிக்கைகள் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் போன்ற சில உள்நாட்டு நிறுவனங்களை நிறுவுதல், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட சில நிலங்களை விடுவித்தல், பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் மற்றும் கொலைகள் தொடர்பில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் சிறை அதிகாரிகளுக்கு எதிராக சில வழக்குகள் தொடுக்கப்படுதல், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை நோக்கிய இலங்கைக்குள் நிகழ்ந்த சில நேர்ப்பாங்கான முன்னேற்றங்கள் என்பனவற்றுக்குப் பங்களிப்பை நல்கியுள்ளன. மேலும் 2014 மார்ச் மாதம் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமை பேரவை அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் வைத்து நான் கைது செய்யப்பட்ட போது ஐ.நா. மனித உரிமை பேரவை மற்றும் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்பட்ட பல தலையீடுகள் ஒப்பீட்டளவில் விரைவாக நாம் விடுதலை செய்யப்பட்டமைக்கு பங்களித்திருக்கக் கூடும் என தனிப்பட்ட முறையில் நானும் நம்புகிறேன்.

மிகவும் தாமதமாக நிறுவப்பட்டாலும் 2021இல் நிறுவப்பட்ட சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையானது, கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை முடக்குதல் மற்றும் மீட்டெடுத்தல், போர்க்கால அட்டூழியங்கள், உயிர்த்த ஞாயிறு படுகொலைகள், பொருளாதார குற்றங்கள் மற்றும் ஊழல்களுக்காக அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் மீது வழக்குத்தொடுத்தல் ஆகியவற்றுக்குப் பங்களிக்கக்கூடும்.

**ஜெனீவாவுக்குச் செல்பவர்கள் துரோகிகளா?**

நான் உட்பட ஜெனீவாவுக்குச் செல்லும் மேற்கூறிய பலரும் அடிக்கடி துரோகிகள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். பொலிஸாரின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் நான் கைது செய்யப்பட்ட போது நான் ஜெனீவாவுக்கு மேற்கொண்ட பயணங்கள் தொடர்பாக விரிவாக என்னிடம் கேள்வி எழுப்பப்பட்டது. மேலும் அந்தக் கைது தொடர்பான உத்தியோக பூர்வ பத்திரத்தில் கூறப்பட்ட மூன்று காரணங்களில் ஒன்று "வெளிநாட்டிற்கு தகவல் அனுப்பியது" என்பதாகும்.

சந்தியா எக்னெலிகொட தனது கணவர் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் போது, ஜெனீவா சென்றமை குறித்து அவரிடம் கடுமையாக கேள்வி எழுப்பப்பட்டது. அவர் ஜெனீவாவிற்கு சென்றது கணவர் காணாமலாக்கப்பட்ட பிறகே ஆகும். அதற்கும் காணாமலாக்கப்படுதலுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. அந்தக் கேள்விகளின் தொனிகள் ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு தனது கதையை கூறியதற்காகவும், அவரது கணவர் காணாமலாக்கப்பட்டது தொடர்பாக உண்மையையும் நீதியையும் கோரி சர்வதேச உதவியை நாடியதற்காகவும் அவரை இழிவுபடுத்துவதற்கும் துன்புறுத்துவதற்குமான ஒரு முனைப்பாகவே தோன்றின.


இது அரசியல்வாதிகள், ஊடகங்கள், சமயத் தலைவர்கள் போன்றவர்களால் பரப்பப்படும் "நாட்டிற்கு எதிரான தீர்மானம்: அறிக்கை" என்ற பிரபலமான பரப்புரை குறித்து இலங்கையர்கள் மறுபரிசீலனை செய்து கேள்வி எழுப்ப வேண்டிய தருணம் ஆகும். ஐ.நா. தீர்மானம் அல்லது அறிக்கை அரசாங்கத்தை விமர்சிக்கக்கூடும், பரிபூரணமற்றதாக இருக்கவும் கூடும். ஆனால், கடந்த சில தசாப்தங்களை உற்று நோக்கினால், காணாமலாக்கப்பட்ட அல்லது கொலை செய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் தொடர்பிலும் வேறு கவலைகள் சார்ந்தும் உண்மையையும் நீதியையும் தேடும் இலங்கை மக்களுக்கு அவர்கள் எதிரானவர்கள் அல்ல என்பது புலனாகிறது.

உண்மையையும் நீதியையும் கோரி ஜெனீவா செல்லும் இலங்கையர்கள் தொடர்பில் பூச்சாண்டி காட்டுவதை விடுத்து அரசியல்வாதிகள், ஊடகங்கள், சமயத் தலைவர்கள், நிபுணர்கள், கலைஞர்கள் போன்றவர்கள் அவர்களது கவலைகளை உணர்ந்து இலங்கையின் வீதிகளில், நீதிமன்றங்களில், ஊடகங்களில் அத்துடன் ஜெனிவா போன்ற சர்வதேச வெளிகளிலும் நீதி கேட்டுப் போராடுபவர்களின் அபிலாஷைகளுக்கும் போராட்டங்களுக்கும் தார்மீக ஆதரவை வழங்க வேண்டும்.


# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?

1) 2) 3)



38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?







1) 2) 3)



39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 

1)  2)  3) 

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..............................

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..............................

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..............................

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..............................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..............................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..............................

(6 புள்ளிகள்)

**02)** அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..............................

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1 38. 2 39. 1 40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

### கல்வி tv CHANNEL-1 — 03.10.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2 — 03.10.2022 திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அம்பாறையில் விவசாயிகளுக்கு உரம் விநியோகிக்க நடவடிக்கை!

காரைதீவு, ஒக். 03

அம்பாறை மாவட்டத்தில் உரிய நேரத்தில் உர விநியோகத்தை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் ஒருங்கிணைப்பு குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீரசிங்க தலைமையில் நடைபெற்றபோதே மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது.

எதிர்வரும் பருவத்திற்கு கால விவசாய தேவையான உரங்களை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தேவையான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது.

உர நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயற்பட அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் உரங்களை உடனுக்குடன் விநியோகிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரும் பருவ காலத்தில் விவசாய பணிகளை தொடங்குவதில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் அவற்றுக்கு தேவையான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும், அம்பாறை பொது வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

காரைதீவு மேற்கு வயல்வீதி தொடர்பாக காரசாரமான விவாதம் இடம் பெற்றது. காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் இப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய போதே விவாதம் சூடாகியது.

தவிசாளருக்கும் பிரதேச செயலாளருக்கும் தெரியாமல் ஒரு பிரதேசத்தில் வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியாது. எனவே, காரைதீவில் உரிய அதிகாரிகள் ஒன்று கூடி தீர்மானிக்கும் முகமாக ஒரு குழுவை நியமிக்குமாறு பணிக்கப்பட்டது. (ஐ)

## கிழக்கு கல்வி பணிப்பாளர் பதவி:

# அனுமதி வழங்கி ஒரு வருடம் கடந்தும் விண்ணப்பம் கோருவதில் இழுத்தடிப்பு

நிந்தவூர்,ஒக்.03

**கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை கோருமாறு அரச சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழு அனுமதி வழங்கி ஒரு வருடமாகியும் கல்வி அமைச்சு இன்னும் விண்ணப்பம் கோராமல் காலம் கடத்தி வருவதாக இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் தெரிவித்துள்ளது.**

இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு முறைப்பாடு செய்து, தமது சங்கம் கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதாக அதன் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

ஒரு பதவிக்கான வெற்றிடம் ஏற்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் அப்பதவி தொடர்பாக விண்ணப்பம் கோரப்படுவது அரச சேவை ஆணைக்குழுவின் நிருவாக நட வடிக்கை விதிமுறையாகும். ஆனால் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் பதவி வெற்றிடம் ஏற்பட்டு சுமார் ஒன்றரை வருட காலம் கடந்துள்ள போதிலும் அப்பதவியை முறைப்படி நிரப்புவதற்கான எந்த வொரு நடவடிக்கையையும் கல்வியமைச்சு எடுக்கவில்லை.

தற்போதைய கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வியமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட கடமை நிறைவேற்றல் கடிதத்தின் அடிப்படையில் சுமார் 15 மாதங்களாகக் கடமை செய்து வருகிறார். இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் அவர் ஓய்வுபெறவுள்ள நிலையில், அப்பதவியை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை கல்வியமைச்சு இதுவரை கோராதுள்ளது.

இலங்கை கல்வி நிருவாக சேவை பிரமாண குறிப்பின் அடிப்படையில் மாகாண கல்வி பணிப்பாளர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும். மாகாண கல்விச் செயலாளருக்கோ மாகாண ஆளுனருக்கோ இது தொடர்பாக எவ்வித அதிகாரமும் இல்லை. எனினும் இதனை மீறிய வகையில் இந்நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. அவசர தேவையின் நிமித்தம் ஒரு சிரேஷ்ட இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரி நியமனம் செய்யப்பட்டார் என்ற வகையில் இதனை ஏற்றுக் கொண்டாலும் இது ஒரு பிழையான முன்மாதிரியாகும்.

தகவலறியும் சட்டத்திற்கு அமைய மாகாண கல்விப் பணிப்பாளர் நியமனம் தொடர்பில் கல்வி அமைச்சிடம் சுமார் 10 மாதங்களுக்கு முன்னர் தகவல் கோரியபோது, விரைவில் விண்ணப்பம் கோரப்படும் எனவும் இதற்குரிய அனுமதியை அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு வழங்கியுள்ளதாகவும் எமது சங்கத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. ஆனால், இன்னும் விண்ணப்பம் கோரப்படவில்லை.

மாகாண கல்வி பணிப்பாளர் பதவி என்பது அகில இலங்கை மட்டத்திலான பதவியாகும். கிழக்கு மாகாண அதிகாரிகளைக் கொண்டே நிரப்ப வேண்டும் என்ற எவ்வித தேவையும் இல்லை. எனவே தகுதியான அதிகாரிகள் திறந்த விண்ணப்பம் கோரப்படுவது மூலம் நிரப்பப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் மற்றும் செயலாளரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழு என்பவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ -06)

# திருமலை வந்தார் இந்தியத் தூதுவர்!

திருகோணமலை, ஒக். 03

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று திருகோணமலைக்கு சென்றார்.

இதன்போது திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த குறைந்த வருமானம் ஈட்டும் 200 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உருப்பினர் கலையரசன், கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)




# பாண்டிருப்பில் முதியோருக்காக நடமாடும் வைத்திய சேவை முகாம்!



பாண்டிருப்பு, ஒக். 03

பாண்டிருப்பில் முதியோர்களுக்கான நடமாடும் வைத்திய சேவை முன்னெடுக்கப்பட்டது.

சுதேச வைத்திய அமைச்சு மற்றும் கிராமிய அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றுடன் கல்முனை பிராந்திய சுகாதாரப்பணிமனை, வடக்கு பிரதேச செயலகம், பிரதேச மாதர் சங்கங்கள் ஆகியன இணைந்து இந்த சேவையை முன்னெடுத்தன.

பாண்டிருப்பு கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த வைத்திய சேவையில், உடல், உள ரீதியாக முதியவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் இனங்காணப்பட்டு சிகிச்சைகள், மருந்துகள், மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (ஐ)

# இளம் பிக்குகள் துஷ்பிரயோகம் விகாரதிபதிக்கு பிணை அளிப்பு!

கல்முனை, ஒக். 03

இளம் பிக்குகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான கல்முனை விகாரதிபதியை நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். எனினும், அவரைப் பிணையெடுக்க ஆட்கள் வராத நிலையில் அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

அத்துடன், இது தொடர்பான வழக்கை எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் வைத்து 3 இளம் பிக்குகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பான வழக்கு வெள்ளிக்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ். எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

இந்நிலையில், இரு தரப்பினர் சார்பிலும் ஆஜரான சட்டத்தரணிகளின் சமர்ப்பணம் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு சந்தேக நபரான பௌத்த மதகுரு தொடர்புபட்ட 3 வழக்குகளில் தலா 3 பேர் வீதம் 9 பேர் கொண்ட 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப்பிணையில் செல்ல கல்முனை நீதிமன்ற நீதிவான் அனுமதித்தார்.

அத்துடன், மாதத்தின் 4 வாரம் வரும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அருகில் உள்ள கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொப்பம் இடுதல், குறித்த வழக்கின் சாட்சிகள் குடும்பத்தினரை அச்சுறுத்துதல், தலையீடு செய்யாதிருத்தல் வேண்டும். வெளிநாடு செல்வதற்கும் பிக்குவுக்கு தடை விதிக்கப்பட்டது.

எனினும், பிக்குவை பிணை எடுக்க எவரும் வராத நிலையில் அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். அத்துடன், இந்த வழக்கை நவம்பர் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# ரஷ்யா மீதான வாக்கெடுப்பை புறக்கணித்தன இந்தியா, சீனா!

நியூயோர்க், ஒக். 03

உக்ரைனின் பகுதிகளை சட்டவிரோதமாக ரஷ்யா இணைத்த விவகாரம் தொடர்பாக ஐ. நா. பாதுகாப்பு சபையில் நடந்த வாக்கெடுப்பை இந்தியாவும் சீனாவும் புறக்கணித்துள்ளன.

உக்ரைன்மீது ரஷ்ய இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. கைப்பற்றப்பட்ட லுஹான்ஸ்க் உள்ளிட்ட 4 நகரங்களை தங்கள் நாட்டுடன் இணைத்துக்கொண்டதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு சபையில் நேற்றுமுன்தினம் வாக்கெடுப்பு நடந்தது. இதனை இந்தியா புறக்கணித்தது.

15 உறுப்பு நாடுகள் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா மற்றும் அல்பேனியா நாடுகள் ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிந்தன. இந்த தீர்மானத்தை 10 நாடுகள் ஆதரித்த நிலையில், இந்தியாவுடன் சீனா, பிரேசில் மற்றும் கபோன் நாடுகள் புறக்கணித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உதைபந்து போட்டியில் வன்முறை; இந்தோனேசியாவில் 127 பேர் பலி!

ஜாவா, ஒக். 03

இந்தோனேசியாவில் உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட வன்முறையில் 127 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவாவில் மலாங் மாகாணத்தில் உள்ள கஞ்சுருஹான் மைதானத்தில் நேற்றுமுன்தினம் உதைபந்தாட்டப் போட்டி நடந்தது. இதில் உள்ளூர் அணியான அரேமா மற்றும் பெர்செபயா சுரபயா களம் கண்டன.

இதில், அரேமா அணி 2-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. சொந்த மண்ணில் தங்கள் அணி தோல்வியடைந்ததை தாங்கிக்கொள்ள முடியாத அரேமா அணியின் தீவிர ரசிகர்கள் கடும் கோபமடைந்தனர்.



உதைபந்தாட்டப் போட்டியில் தங்கள் அணி தோல்வியடைந்ததை அடுத்து ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஆடுகளத்துக்கு சென்றனர். இதன்போது, களத்தில் இருந்த பல அரேமா வீரர்கள் தாக்கப்பட்டனர். இதை கட்டுப்படுத்த மக்கள் கூட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியதை அடுத்து அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

கலவரம் மற்றும் கூட்ட நெரிசலில் சிக்கி பலர் படுகாயமடைந்தனர். சுமார் 180 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். திக்கப்பட்டவர்களில் பலர் அதிக நெரிசல் மற்றும் மூச்சுத் திணறல் ஆகியவற்றால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்று நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

உயிரிழந்தவர்களில் 2 பேர் பொலிஸ் அதிகாரிகள். 34 பேர் மைதானத்திற்குள் உயிரிழந்தனர், மீதமுள்ளவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது. (ஐ)

# ஹிஜாப் அணியாமல் உணவகத்தில் உணவருந்திய இளம் பெண்கள் கைது!

## ஈரானில் அதிகரிக்கிறது பதற்றம்!



தெஹ்ரான், ஒக். 03

ஈரானில் உள்ள ஓர் உணவகத்தில் ஹிஜாப் அணியாமல் உணவு உண்ட இரு இளம் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி யுள்ளன.

டோன்யாவும் அவரின் நண்பரும் ஹிஜாப் அணியாமல் உணவகத்தில் உணவு சாப்பிட்டுள்ளனர். இதன் காரணமாக இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும், அவர்களின் செயலுக்கு விளக்கத்தையும் பாதுகாப் புப் படையினர் கேட்டுள்ளனர். இரு பெண்களும் எவின் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் தலைநகர் தெஹ்ரானின் எவின் சிறைச்சாலை என்பது ஒரு மோசமான சிறையாகக் கருதப்படுகிறது. ஈரான் அரசாங்கத்தை எதிர்க் கும் போராட்டக்காரர்கள் பொதுவாக இந்த சிறைச்சாலையில் அடைக்கப்படுவார் கள். இந்த சிறைச்சாலை உளவுத்துறை அதிகாரிகளால் கண்காணிக்கப்படுகிறது.

ஈரானில் ஹிஜாப்க்கு எதிராக போராட்டங்கள் வலுத்து வரும் நிலையில், இந்த இளம் பெண்களின் கைது மேலும் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

ஈரானில் 9 வயது சிறுமி முதல் வயதான பெண்கள் வரை ஹிஜாப் அணிவது கட்டாய மாக்கப்பட்டுள்ளது. பெண்கள் ஆடை அணி யும் விதத்தை கண்காணிக்க “காஸ்த் எர்ஷாத்” என்ற சிறப்பு பிரிவு பொலிஸார் பொது இடங்களில் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 13ஆம் திகதி ஈரானின் குர்திஸ்தான் மாகாணம், சஹிஸ் நகரை சேர்ந்த மாஷா அமினி (22) என்பவர் தலைநகர் தெஹ்ரானில் உள்ள உறவினரை சந்திக்க குடும்பத்துடன் சென்றார். அவர் சரியாக ஹிஜாப் அணியவில்லை என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதில் மாஷா உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து ஹிஜாப்புக்கு எதிராக அந்நாட்டில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அதிநவீன ரோபோவை அறிமுகம் செய்தார் மஸ்க்!



நியூயோர்க், ஒக். 03

ஒப்டிமஸ் என்று பெயரிட் டுள்ள அதிநவீன ரோபோவை அறிமுகம் செய்துள்ளார் ரெஸ்லா வின் பிரதம நிறைவேற்று அதிகாரியான எலான் மஸ்க்.

அலுவலக வீட்டு வேலைகளை செய்யும் ஒப்டிமஸ் ரோபோவை 20 ஆயிரம் டொலருக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 73 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய்- விற்க எலான் மஸ்க் முடிவெடுத்துள்ளா ரெனத் தெரிவித்தார்.

இந்த ரோபோவில் ஒரு மணி நேரத்துக்கு 2.3 கிலோவாட்ஸ் சேமிப்பகம் உள்ளது. இது ஒரு நாள் முழுவதும் வேலை செய்வதற்கு ஏற்றது. ரெஸ்லா சிப்பில் இயங்குகிறது.

இந்த ரோபோவால் 9 கிலோ எடை கொண்ட பொருட்களை வரை துக்க முடியும் என்று கூறிய அவர், அந்த ரோபோ நடனமாடும் காணொலியையும் தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். (ஐ)

# புர்கினோ பசோ நாட்டில் இராணுவ ஆட்சி கவிழ்ந்தது!



வாகடூகு, ஒக். 03

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினோ பசோவில் இராணுவ ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

மேற்கு ஆப்பிரிக்க நாடான புர்கினோ பசோவில் கடந்த சில ஆண்டுகளாக கடும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்து வருகிறது. அயல் நாடான மாலியில் இருந்து ஊடுருவிய பயங்கரவாதிகள் நாடு முழுவதும் பயங்கரவாத தாக்குதல்களை நடத்தினர்.

இந்த சூழலில் பயங்கரவாதிகளுக்கு எதிராக அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சாட்டி அந்த நாட்டு இராணுவம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.

இதை தொடர்ந்து, மூத்த இராணுவ அதிகாரியான போல் ஹென்றி டமிபா இடைக்கால ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். ஆனாலும் அவரின் தலைமையிலான இராணுவ அரசும் பயங்கரவாதிகளை ஒடுக்க தவறியதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து, போல் ஹென்றிக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், அண்மையில் இராணுவ அணி வகுப்பில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இது மேலும் கிளர்ச்சியை தூண்டியது.

இதையடுத்து இராணுவ தளபதி இப்ராஹிம் டிராரே தலைமையிலான இராணுவம் ஆட்சி அதிகாரத்தை நேற்று முன்தினம் கைப்பற்றியது.

தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய இராணுவ தளபதி இப்ராஹிம் டிராரே இடைக்கால ஜனாதிபதி பதவியில் இருந்து போல் ஹென்றி நீக்கப்பட்டார். அடுத்த அறிவிப்பு வரும் வரை எல்லைகள் மூடப்பட்டிருக்கும் என்றும் அனைத்து அரசியல் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அறிவித்தார். (ஐ)

ஈழநாடு






# ஜாம்பவான்களின் ரி - 20; இந்திய அணி சம்பியன்!

ராய்பூர், ஒக். 03

இந்தியாவில் நடைபெற்ற வீதிப் பாதுகாப்பு இருபது - 20 இரண்டாவது தொடரிலும் இந்திய ஜாம்பவான் அணி சம்பியனாகி வெற்றிக் கிண்ணத்தை தக்கவைத்துக்கொண்டது.

இலங்கை ஜாம்பவான் அணிக்கு எதிராக ராய்பூர் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 33 ஓட்டங்களால் வெற்றிபெற்று இந்திய ஜாம்பவான் 2 ஆவது தொடர்ச்சியான தடவையாக சம்பியனானது.

முதல் தொடரைப் போன்றே இந்த அத்தியாயத்திலும் தொடர்நாயகன் விருதை இலங்கை ஜாம்பவான் அணியின் தலைவர் திலகரட்ண டில்ஷான் தனதாக்கிக் கொண்டார்.

நமன் ஒஜா அபாரமாக துடுப்பெடுத்தாடி அதிரடியாக பெற்ற சதம், வினய் குமார் மற்றும் அபிமன்யு மிதுன் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சு என்பன இந்திய ஜாம்பவான் சம்பியனாவதற்கு பெரிதும் உதவின.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த இந்திய ஜாம்பவான் நமன் ஒஜாவின் அபார சதத்தின் உதவியுடன் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 195 ஓட்டங்களைக் குவித்தது.

அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் (0), சுரேஷ் ரெய்னா (4) ஆகிய இருவரும் ஆடுகளம் நுழைந்த வேகத்தோடு ஆட்டமிழந்தனர்.

எனினும் நமன் ஒஜாவும் வினய் குமாரும் 3ஆவது விக்கெட்டில் பெறுமதிமிக்க 90 ஓட்டங்களைப் பகிர்ந்து இந்திய ஜாம்பவான் அணிக்கு உற்சாகம் ஊட்டினர். வினய் குமார் 21 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து யுவராஜ் சிங்குடன் 4ஆவது விக்கெட்டில் மேலும் 45 ஓட்டங்களை வினய் குமார் பகிர்ந்தார். யுவராஜ் சிங் 19 ஓட்டங்களைப் பெற்றார். இர்பான் பதான் 11 ஓட்டங்களுடனும் அவரது சகோதரர் யூசுப் பதான் ஓட்டம் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

நமன் ஒஜா 71 பந்துகளை எதிர்கொண்டு 15 டிபவுண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 108 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இலங்கை ஜாம்பவான் பந்துவீச்சில் நுவன் குலசேகர 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் இசுறு உதான 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

196 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை ஜாம்பவான் அணி 18.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

கடந்த வருடத்தில் போன்றே இந்த வருடமும் லீக் சுற்றிலும் அரையிறுதி போட்டியிலும் திறமையாக விளையாடிய இலங்கை ஜாம்பவான் இறுதிப் போட்டியில் பிரகாசிக்கத் தவறியது.

டில்ஷான் முனவீர (8), சனத் ஜயசூரிய (5), திலகரட்ண டில்ஷான் (11), உபுல் தரங்க (10), அசேல குணரட்ண (19), ஜீவன் மெண்டிஸ் (20) ஆகியோர் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழக்க, இலங்கை ஜாம்பவான்கள் 13ஆவது ஓவரில் 6 விக்கெட்களை இழந்து 85 ஓட்டங்களை மாத்திரம் பெற்று மோசமான நிலையில் இருந்தது.

ஆனால், இஷான் ஜயரட்ண, மஹேல உடவத்த ஆகிய இருவரும் 7ஆவது விக்கெட்டில் 31 பந்துகளில் 63 ஓட்டங்களை பகிர்ந்து அணிக்கு தெம்பூட்டினர். எனினும், அவர்கள் இருவரும் 18ஆவது ஓவரில் மிதுனின் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழக்க இலங்கை ஜாம்பவான் எதிர்பார்ப்பு தவிடுபொடியானது.

இஷான் ஜயரட்ன 22 பந்துகளை எதிர்கொண்டு தலா 4 சிக்ஸர்கள், 4 பௌண்டரிகளுடன் 51 ஓட்டங்களையும் மஹேல உடவத்த 19 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய பந்துவீச்சில் வினய் குமார் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் அபிமன்யு மிதுன் 27 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இந்தத் தொடரில் மொத்தமாக 192 ஓட்டங்களைப் பெற்றதுடன் 5 விக்கெட்களைக் கைப்பற்றி, 5 பிடிகளையும் எடுத்த திலகரட்ண டில்ஷான் தொடர் நாயகனாகத் தெரிவானார். ஆட்டநாயகன் விருது நமன் ஒஜாவுக்கு வழங்கப்பட்டது.

## ரி -20 உலகக் கிண்ணத் தொடர் பும்ரா இன்னும் விலகவில்லை!

### கங்குலி தகவல்




கொல்கத்தா, ஒக். 03

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்ப்ரீத் பும்ரா எதிர்வரும் டி20 உலகக் கிண்ணத் தொடரில் இருந்து இன்னும் விலகவில்லை என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

முதுகு பகுதியில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தொடரில் இருந்து விலகியுள்ளார் பும்ரா. தற்போது அவர் பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் உள்ளார். அவரை அங்குள்ள மருத்துவக் குழுவினர் கண்காணித்து வருகின்றனர். தென்னாபிரிக்க அணிக்கு எதிரான இருபது - 20 தொடரில் பும்ராவுக்கு மாற்றாக முகமது சிராஜ் இடம் பிடித்துள்ளார். இந்நிலையில், கங்குலி இதனை தெரிவித்துள்ளார்.

“பும்ரா, இன்னும் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து விலகவில்லை. அவர் தொடரில் பங்கேற்பது குறித்து முடிவு அடுத்த 2 அல்லது 3 நாட்களில் எடுக்கப்படும்” என கங்குலி தெரிவித்துள்ளார்.

வரும் 6ஆம் திகதி வியாழன் அன்று இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட அல்லது. அங்கு இந்திய அணி தொடருக்கான பயிற்சிகளை மேற்கொள்ள உள்ளது. வரும் 16ஆம் திகதி உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகிறது. இந்திய அணி சுப்பர் 12 சுற்றில் தனது முதல் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாட உள்ளது.

## மகளிர் ஆசியக் கிண்ண தொடர் இந்தியாவிடம் வீழ்ந்தது இலங்கை



டாக்கா, ஒக். 03

மகளிர் ஆசிய கிண்ண இருபது 20 கிரிக்கெட் தொடரின் 2ஆவது போட்டியில் இலங்கையை 41 ஓட்டங்களால் இந்தியா வெற்றிகொண்டது.

ஜெமிமா ரொட்றிகஸ் குவித்த அபார அரைச் சதம், ஹேமலதா, பூஜா, தீப்தி ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சு என்பன இந்தியாவுக்கு இலகுவான வெற்றியை ஈட்டிக்கொடுத்தன.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய மகளிர் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் 4 ஓவர்களுக்குள் அதிரடி வீராங்கனைகளான ஸ்ம்ரிதி மந்தானா (6), ஷெபாலி வர்மா (10) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுக்கு இழக்க இந்தியா பெரும் சோதனையை எதிர்கொண்டது.(23 - 2 விக்.)

ஆனால், ஜெமிமா ரொட்றிகஸ், அணித் தலைவி ஹார்மன்ப்ரீத் கோர் ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 71 பந்துகளில் 92 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர்.

ஹர்மன்ப்ரீத் கோர் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து ஜெமிமா, ரிச்சா கோஷ் (9), பூஜா வஸ்த்ரேக்கர் (1) ஆகிய மூவரும் சீரான இடைவெளியில் களம் விட்டகன்றனர்.

திறமையாகத் துடுப்பெடுத்தாடிய ஜெமிமா 53 பந்துகளில் 11 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 73 ஓட்டங்களைப் பெற்றார். தயாளன் ஹேமலதா 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இலங்கை பந்துவீச்சில் ஓஷதி ரணசிங்க 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் சமரி அத்தப்பத்து 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சுகந்தி குமாரி 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 18.2 ஓவர்களில் 109 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

இலங்கை துடுப்பாட்டத்தில் மூவரைத் தவிர, ஏனைய அனைவரும் ஒற்றை இலக்க எண்ணிக்கைகளையே பெற்றனர்.

அணித் தலைவி சமரி அத்தப்பத்து மீண்டும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறி 5 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார்.

ஹசினி பெரேரா (30), ஹர்ஷிதா சமரவிக்ரம (26), ஓஷாதி ரணசிங்க (11) ஆகிய மூவரே துடுப்பாட்டத்தில் ஓரளவு திறமையை வெளிப்படுத்தினர்.

இந்திய பந்துவீச்சில் தயாளன் ஹேமலதா 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் பூஜா வஸ்த்ரேக்கர் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் தீப்தி ஷர்மா 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

# பயங்கரவாத சட்டத்தை பயன்படுத்தி அன்று இனவழிப்பு; இன்று பழிவாங்கல்!

## திஸ்ஸ விதாரண எம். பி.

கொழும்பு, ஒக். 03

**நாட்டில் பயங்கரவாத தடைச் சட்டம் அமுலில் இருக்கும் வரை சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்ந்து நெருக்கடிகளை எதிர்கொள்ளும். பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக சிங்களவர்கள் குரல் கொடுக்கின்றனமை வரவேற்கத்தக்கது. இன அழிப்புக்காக பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் தற்போது அரசியல் பழிவாங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றனமை வன்மையாக கண்டிக்கத்தக்கது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார்.**

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யுத்தம் முடிவடைந்த பிறகு அனைத்து கட்சி தலைவர் மாநாட்டை முன்னின்று நடத்தினேன். அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கு எதிராக அடக்கு முறை கட்டவிழ்த்துப் பட்டதால் 30 வருடகால யுத்தம் தோற்றம் பெற்றது. ஆகவே, தமிழர்களுக்கு முரண்பாடற்ற வகையில் அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என பரிந்துரைத்தேன்.

அத்துடன் , யுத்தம் முடிவடைந்து விட்டது ஆகவே பயங்கரவாத தடைச்சட்ட அவசியமற்றது என்பதால் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறும், சிறை பிடிக்கப்பட்ட விடுதலை புலிகளின் போராளிகளை மீண்டும் சமூகமயப்படுத்த புதிய சட்டங்களை இயற்றுமாறும் பரிந்துரைத்தேன்.

சர்வகட்சி கூட்டத்தைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியை தவிர்த்து ஏனைய அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்தன. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டால் மாத்திரமே தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும் என்ற பரிந்துரையை முன்னிலைப்



படுத்தி அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முழுமையான அறிக்கை சமர்ப்பித்தேன்.

யுத்த வெற்றியை தொடர்ந்து அடுத்த ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு வெற்றிபெறுவது என்பது குறித்து மகிந்த ராஜபக்ஷ அவதானம் செலுத்தினாரே தவிர அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்ற அவதானம் செலுத்தவில்லை. அறிக்கையை கிடப்பில் போட்டார்.

இனப்பிரச்னைக்கு கட்டாயம் தீர்வு வழங்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்ட நிலையில் இனவாதத்தை முன்னிலைப்படுத்திய அரசியல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இனவிரோத செயல்பாடுகள் தேசிய நல்லிணக்கத்துக்கு பாரிய தடையாகக் காணப்பட்டது.

தமிழ், முஸ்லிம் சமூகத்தின் மீது தாக்கம் செலுத்திய பயங்கரவாத தடைச் சட்டம் தற்போது சிங்களவர்களுக்கு எதிராகவும் திரும்பியுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என பெரும்பான்மை சமூகமும் குரல் கொடுப்பது வரவேற்கத்தக்கது. நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க முடியும்.

இன அழிப்புக்காக பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் தற்போது அரசியல் பழிவாங்கலுக்காக பயன்படுத்தப்படுகிறது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் வரை சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்ச்சியாக நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் - என்றார். (ஐ)

# பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக மொனராகலையிலும் கையொப்பம்!

நிந்தவூர், ஒக். 03

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய நேற்று பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை மொனராகலை பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதுக் குறிப்பிடத்தக்கது. (ஐ - 06)

# கொலை, கொள்ளை சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஒக். 03

குருநாகலில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் நகரில், வர்த்தகரொருவர் கடந்த 28ஆம் திகதி கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவர் அணிந்திருந்த தங்க நகைகள் மற்றும் பணம் என்வையும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில், போத்துஹர பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர் குருநாகல் பிரதேசத்திலுள்ள வாகனங்களைப் பழுதுபார்க்கும் நிலையத்தில் பணிப்புரிந்து கொண்டு இருந்த கைதுசெய்யப்பட்டுள்ளார். (கே)

# ஜெனிவா விவகாரத்தில் ரணிலின் வாக்குறுதிகளை நம்பமுடியாது!

## வாசுதேவ எம். பி. இப்படி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 03

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நிபந்தனைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரகசியமான முறையிலாவது நிறைவேற்றுவார் - என்று இடதுசாரி ஜன நாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் பாராளுமன்ற விவாதத்தை கோரவுள்ளோம். ஜெனிவா விவகாரத்தில் ஜனாதிபதியின் வாக்குறுதிகள் மீது நம்பிக்கை கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு எதிராக பிரேரணைகள் கொண்டு வரப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனால் எவ்வித பயனும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைக்கப் பெறவில்லை.

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் தீர்வு பெற்றுக்கொடுப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் தமிழர்களுக்கான அபிவிருத்திகளை தொடர்ந்து புறக்கணித்து வருகிறார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுக்களை மேற்கொண்டால் அரசியல் தீர்வுக்கான மதிப்பு இல்லாமல் போய்விடும் என குறிப்பிடும் தமிழ் தலைமைகள்



அரசியல் சிறப்புரிமைகளை முழுமையாக பெற்றுக்கொண்டு சுகபோகமாக வாழ்கிறார்கள்.

தற்போதைய நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு அரசியல் தீர்வை காட்டிலும், அபிவிருத்தியே முக்கியமானது. பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களை முன்னிலைப்படுத்தி தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்து அரசியல் பயனை பெற்றுக்கொள்கிறார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் திகன வன்முறை சம்பவத்தில் அனைத்து தரப்பினரின் அவதானமும் வன்முறை மீது காணப்பட்ட நிலையில், ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சட்டத்தை நிறைவேற்றினார். தற்போதும் அவர் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பாராளுமன்ற விவாதத்தை கோரவுள்ளோம். ஜெனிவா விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாக் குறுதிகள் மீது நம்பிக்கை கொள்ள முடியாது - என்றார். (ஐ)

# போதைவஸ்துடன் ஆறு பேர் கைது!

கொழும்பு, ஒக். 03

கொழும்பு, கம்ஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில், பொலிஸார் மேற்கொண்ட போதைப் பொருள் சுற்றி வளைப்புகளில் 30 கிராம் ஹெரோய்ன், 20 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் அறுவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ரத்மலானை, மினுவாங்கொட, மொரஹேனை, புளத்சிங்கள, பேலியாகொடை பிரதேசங்களை சேர்ந்த 58, 31, 24, 32, 52 மற்றும் 42 வயதுகளையுடைய ஆறு பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# பயணச் சீட்டின்றி பயணம் 4 இலட்சம் ரூபாய் அபராதம்!

கொழும்பு, ஒக். 03

கடந்த செப்ரெம்பர் மாதம் கொம்பனிதெரு ரயில் நிலையத்தினூடாக பயணச்சீட்டு இன்றி பயணித்த 129 பயணிகளிடமிருந்து அபராதத் தொகை அறவிடப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக 129 பயணிகளிடமிருந்து நான்கு இலட்சத்து இரண்டாயிரத்து இருநூறு ரூபாய் அறவிடப்பட்டுள்ளதாக ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி முதல் வழமை போன்று கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தில் பயணச்சீட்டு இன்றி பயணிக்கும் பயணிகளை பரிசோதிக்குமாறு ரயில் நிலைய பொறுப்பதிகாரி சமன் குமார வழங்கிய பணிப்புரையின் அடிப்படையில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொம்பனி தெரு ரயில் நிலையத்தில் இரண்டு வெளியேறும் கதவுகள் உள்ள நிலையில், நீதிபதி அக்பர் மாவத்தையில் அமைந்துள்ள வெளியேறும் வாயிலில் மட்டுமே இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொம்பனிதெரு புகையிரத நிலையத்தில் 18 கனிஷ்ட பணியாளர்கள் பணியாற்ற வேண்டிய போதிலும் ஆறு பணியாளர்கள் மாத்திரமே பணிபுரிந்து வருவதாகவும் இதன் காரணமாக ரயில் நிலையத்தில் மற்றைய வெளியேறும் பகுதியில் சோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரயில் நிலையங்களில் அதிகளவான பணியாளர் வெற்றிடங்கள் காணப்படுவதால் பிரதான நிலையங்களின் வெளியேறும் வாயில்களில் தேவையான சோதனைகளை மேற்கொள்வதற்கு பணியாளர்கள் இல்லை எனவும் தற்போது அதிகளவான பயணிகள் பயணச்சீட்டு இன்றி பயணிப்பதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (கே)

## கூட்டணியில்...

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தாய்க் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணிக்கு தேர்தல் திணைக்களம் மான் சின்னத்தை வழங்கியுள்ளது. இந்நிலையில், அந்தக் கட்சியின் எதிர்காலப் போக்கு தொடர்பில் அதன் தலைவர் விக்னேஸ்வரனிடம், “தமிழ் மக்கள் கூட்டணி தொடர்ந்தும் கூட்டணியாக நிலைக்குமா? அடுத்து வரும் தேர்தலில் எந்த சின்னத்தில் கூட்டணி போட்டியிடும்? (தமிழ் மக்கள் கூட்டணியின் சின்னமான மானா அல்லது கூட்டணி சின்னமான மீனா?)”, என ஈழநாடு எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இன்று தமிழ் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி எழுந்துள்ளது. எம் கட்சிகளிடையேயான பிரிவுகளை மறந்து ஒற்றுமைப்பட்டு ஒரு குரலில் எமது உரிமைகளை அரசாங்கத்திடம் முன்வைத்து உரிய தீர்வைப் பெற வேண்டும் என்ற கருத்து மேலோங்கி வருகின்றது. அந்த விதத்திலே எமது பங்காளிக் கட்சிகளும் நாமும் ஒரு கூட்டணியாக இது வரை காலமும் நிலைத்து நிற்பது எமக்கொரு பலமே. தலைவர்கள் ஆணவம் களைந்தால் ஒற்றுமை சாத்தியமாகும். எமது கூட்டணித் தலைவர்கள் நடைமுறைக்கேற்றவாறு நடந்து கொள்ளும் பண்பு தெரிந்தவர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சிதையத் தொடங்கியுள்ளது. கூட்டமைப்பின் பலமும் ஒருமைப்பாடும் ஒரு சிலரின் அபசுர நடவடிக்கைகள் காரணமாகப் பாதிப்படையத் தொடங்கியது. நான் வெளியேறியதும் அந்த அபசுரத்தைச் சகிக்க முடியாமல்தான். அங்கு பிரிவு ஏற்படும்போது இங்கு ஒருமையும் ஒற்றுமையும் ஏற்படுவதே சாலச் சிறந்தது. ஆகவே, எமது தேசியக் கூட்டணி தொடரும் - பலமுடன் தொடரும்.

மானா மீனா என்பது இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. எமது புரிந்துணர்வின்படி அது மீன். எமது கட்சியின் அண்மைய பதிவின் பின் அது மானாகவும் மாறலாம். வேறு கட்சிகளும் எம்முடன் சேர்ந்து நாங்கள் ஒரு புதிய சின்னத்தில் தேர்தலை எதிர்நோக்குவோம் என்றால் அவர்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும். அப்போது மீனுக்குப் பதில் மான் முதன்மை பெற வாய்ப்புண்டு.

ஆனால், தேர்தல் திணைக்களம் கூறுவது போல் உள்ளூராட்சித் தேர்தல் அடுத்த மார்ச் மாதத்தில் நடைபெறுமா என்பது பெரும் கேள்விக்குறியாகும் - என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

## இந்திய...

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்று திருகோணமலைக்கு வருகை தந்தார். இதன்போது, வரலாற்று பிரசித்தி பெற்றதும் தேவாரப் பாடல் பெற்றதும் அண்மைக்காலமாக ஆக்கிரமிப்பு பிரச்னையை எதிர்கொண்டுள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கும் சென்றார்.

நேற்றைய தினம் பூசை வழிபாட்டில் கலந்து கொண்ட அவர் ஆலயத்தின் நிர்மாண, நிர்வாக பணிகளையும் பார்வையிட்டார். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு நான் வருகை தந்திருக்கிறேன். இன்றைய நாள் (நேற்று) ஒரு விசேட நாள் நவராத்திரி காலம் விரதம் கடைப்பிடிக்கப்படும் அதே காலத்தில் காந்தி ஜெயந்தி தினமும் நடைபெறுகிறது.

இந்த ஆலயத்தினுடைய தொன்மையான வரலாறு பூர்வீகமான விடயங்கள் அனைத்தையும் அறிஞர்களும் ஆலய நிர்வாகிகளும் நிறைந்த தெளிவுடன் எனக்கு அறிய தந்திருக்கின்றார்கள்.

எதிர்காலத்தில் இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்திய அரசாங்கம் உதவுவதற்கு காத்துக் கொண்டிருக்கிறது என்பதை மிகத் தாழ்மையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆலயம் புனிதமானது மாத்திரமில்ல நாயன்மார்களால் பாடப்பட்ட ஓர் ஆலயம் என்பதையும் நான் அறிவேன். அந்த வகையில் இந்த ஆலயத்தின் எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும்.

இங்கு ஓர் இராஜகோபுரம் அமைக்கப்பட இருக்கின்றதையும் ஆலய நிர்வாகிகள் எனக்கு தெரிவித்தார்கள். அந்த விடயம் தொடர்பாகவும் இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தும் - என்றார். (ஐ)

## இலங்கையின்...

இணை அனுசரணை நாடுகளிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கோரியுள்ளார்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படுகின்றது. இந்தப் பிரேரணையை கொண்டுவரும் முயற்சிகளை எடுத்துள்ள, பிரித்தானியா, அமெரிக்கா, ஜேர்மன், கனடா போன்ற நாடுகள் அதனை முழுமையான நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அத்துடன், நிறைவேற்றப்படும் பிரேரணையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான உரிய பொறிமுறைகளும் வகுக்கப்பட வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த 13ஆண்டுகளாக பொறுப்புக்கூறலுக்கான செயல்பாடுகள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை. எடுக்கப்பட்ட ஒருசில முயற்சிகளும் திருப்திகரமானதாக இல்லை. இவ்வாறான நிலையில் தான் புதிய பிரேரணை ஒன்று தற்போது கொண்டு வரப்படவுள்ளது.

ஆகவே, குறித்த பிரேரணையில் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் அதேவேளை அதனை நடைமுறைச் சாத்தியமாக்கும் வகையிலான சர்வதேச சமூகத்தின் பிரசன்னத்துக்கான ஏற்பாடுகளை உள்ளீர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

இந்தவிடயத்தில் இணை அனுசரணை வழங்கும் பிரித்தானியா தலைமையிலான நாடுகள், அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், உள்ளிட்டவை விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## சமூக சீரழிவு...

தார். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

கோட்டை பகுதிகளில் அநாகரிக செயல்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்கள் இனங்காணப்பட்டால், அவர்களை கடுமையாக எச்சரித்து பொலிஸார் ஊடாக பெற்றோரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் சமூகச் சீரழிவு நடவடிக்கைகள், போதைப் பொருள் பாவனை மையமாக மாறிவருகிறது. கோட்டை பகுதியை சுற்றியுள்ள பற்றைக் காடுகளை அகற்றுமாறு நீதிபதிகள் யாழ். மாநகர சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆகவே இங்குள்ள பற்றைக்காடுகளை உடனடியாக அகற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

யாழ்ப்பாணக் கோட்டை பகுதி தொல்லியல் திணைக்களத்தின் ஆளுகைக்குள் இருப்பதால் தொல்லியல் திணைக்களத்தினருடன் பேசினோம். அவர்களும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர் - என்றார். (ஐ-3)

# காணாமல் போன இளைஞர் சடலமாக மயானத்தில் மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 03

புதூர் பிரதேசத்தில் 5 நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த இளைஞன், 5 தினங்களின் பின்னர் அந்தப் பிரதேச மயானத்தில் உருக்குலைந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

மட்டக்களப்பு - புதூர் 5ஆம் குறுக்கைச் சேர்ந்த 24 வயதுடைய ஜெயகரன் அருஜன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி செவ்வாய்கிழமை வீட்டை விட்டு வெளியேறிய காணாமல்போன இளைஞனே 5 தினங்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஐ)

## பசுபதிப்பிள்ளை...

யாழ்ப்பாணம் - நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கிளிநொச்சி மாவட்டத்தின் ஓய்வுபெற்ற கிராம சேவையாளரான இவர், இறுதிப் போர் கால கட்டத்தில் சிறிது காலம் விடுதலைப் புலிகள் அமைப்பிலும் இணைந்திருந்தார்.

கிளிநொச்சி - உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் பிக்கு தலைமையில் முன்னெடுக்க முயன்ற அகழ்வாராய்ச்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களை ஒருங்கிணைத்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நப்கின்களுக்கு...

யப்படும் சுகாதார நப்கின்களுக்கு வரிச் சலுகை வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 10 நப்கின்கள் அடங்கிய ஒரு பைக்கெற்றின் விலை 50 - 60 ரூபாயால் குறைவடையும். இதற்கமைய அதன் அதிகபட்ச சில்லறை விலை 260 முதல் 270 ரூபாயாக இருக்கும்.

இதேபோன்று, இறக்குமதி செய்யப்படும் நப்கின்களின் விலைகளும் 18 அல்லது 19 வீதத்தால் குறைவடையும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக வரிச் சலுகை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரச அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

உற்பத்தியாளர்கள் மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் உரிய வரிச் சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கு தொழில் அமைச்சின் செயலாளரின் பரிந்துரைகளை பெற வேண்டும் என்பதனால், அதற்கான செயன்முறைகளை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய நப்கின் உற்பத்திக்கான பிரதான 5 மூலப்பொருட்களை இறக்குமதி செய்கின்றபோதும், இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியின்போதும் 15 வீத சுங்க இறக்குமதி வரி, 10 -15 வீத சி. ஈ. எஸ். எஸ். வரி மற்றும் 10 வீதம் பீ. ஏ. எல். வரி , ஆகியன நடைமுறையிலிருக்கும்.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் நப்கின்களுக்கும், இறக்குமதி செய்யப்படும் நப்கின்களுக்கும் வற் வரி அறவிடப்படாது.

## சிகரெட் விலை...

யாகவும், ‘பென்சன் ரூ ஹெட்ஜஸ்’ சிகரெட்டின் புதிய விலை 90 ரூபாயாகவும் அதிகரிக்கப்படும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சமூக பாதுகாப்புத் திட்டம் நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்படுவதே சிகரெட்டின் விலை அதிகரிக்கப்படுவதற்கு காரணம் என புகையிலை நிறுவனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, நிறுவனத்தின் ஏனைய சிகரெட் தயாரிப்புகளான கப்டன், பிரிஸ்டல், துன்கில் போன்றவற்றின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## போதைப்...

வதில் இருந்து தடுப்பதற்காக எடுக்க வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இதில் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர்,

போதைப்பொருள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து செல்கின்றது. போதைப் பொருள் விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துவதை கட்டுப்படுத்த புதிய படைப் பிரிவை அமைக்க இருக்கின்றோம்.

இதேபோன்று இளம் சமூகத்தினர் போதைப்பொருள் பயன்படுத்துவதை தடுப்பதை நோக்காகக்கொண்டு தயாரிக்கப்படும் தேசிய கொள்கைக்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

அத்துடன், நாட்டின் இளம் சமூகத்தினர் மத்தியில் அபாயகர ஔடத பயன்பாடு வேகமாகப் பரவி வருகின்றது. போதைப்பொருள் பயன்படுத்துபவர்களில் பெரும்பாலானவர்கள் 20 - 30 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களாவர்.

இந்த நிலைமையை விரைவாக கட்டுப்படுத்தாவிட்டால், எதிர்வரும் சில வருடங்களுக்குள் இலங்கையில் இளம் பிரவினரில் அதிகமானவர்களின் சுகாதார நிலைமை மோசமடைந்து குடும்ப வாழ்க்கை சீரழிந்து, ஒழுக்கமற்ற சமூக விரோத செயல்கள் நிறைந்த சமூக சூழல் உருவாகும்.

அத்துடன் போதைப்பொருள் பயன்படுத்தியமை காரணமாக சிறைப்படுத்தப்படும் நபர்கள் புனர்வாழ்வு மற்றும் சமூக சீர்திருத்த செயல்பாடுகளின்பால் அனுப்புவது தொடர்பாக கூடிய அவதானம் செலுத்தவேண்டி இருப்பதுடன் அதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக எடுப்போம்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் தற்போது அபாயகர ஔடத பயன்பாடு அதிகரித்துள்ளது. அதனால் தேசிய கொள்கை தயாரிக்கும்போது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களை அறிவுறுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ஐ)

## எதிர்ப்பு...

ஜோசப் ஸ்டாலின் ஆகியோருடன், அரசியல்வாதிகள், சர்வமத தலைவர்கள், மூவின மக்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, சர்வஜன நீதி அமைப்பு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் காங்கேசன்துறையிலிருந்து அம்பாந்தோட்டை வரை கையெழுத்துப் பெறும் போராட்டம் கடந்த மாதம் 10ஆம் திகதி ஆரம்பமானது.

கையொப்பங்களை சேகரிக்கும் ஊர்தி நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்றது. இதன்போது, மூவின மக்களும் போராட்டத்துக்கு ஆதரவாக கையொப்பங்களை அளித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-06)

ஈழநாடு
Eelanadu

# மூழ்கிக்கொண்டிருந்த படகில் 38 பேர் காப்பாற்றப்பட்டனர்!

## கற்பிட்டியில் சம்பவம்

கொழும்பு, ஒக். 03

கற்பிட்டி கடற்பரப்பில் மூழ்கிக்கொண்டிருந்த இழுவை படகில் இருந்த 38 உள்ளூர் சுற்றுலா பயணிகளை இலங்கை கடற்படை மீட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக இலங்கை கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

கற்பிட்டியிலிருந்து பத்தலங்குண்டுவவிற்கு உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் குழுவை ஏற்றிச் சென்ற படகில் இருந்த 38 பேரை இவ்வாறு மீட்டுள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.

சுற்றுலாப் பயணிகளின் கடல் போக்குவரத்துக்காக பதிவு செய்யப்பட்ட இழுவை படகு ஒன்றில் ஒரு குழுவினரை ஏற்றிச் செல்லும் போது அதில் கடல் நீர் கசிவு ஏற்பட்டதால் குறித்த படகு மூழ்கும் அபாயத்தில் இருந்துள்ளது.

பயணிகள் படகு உரிமையாளரால் வடமேற்கு கடற்படையினருக்கு குறித்த சம்பவம் தொடர்பில் தகவல் வழங்கியமைக்கு அமைவாக விரைந்து செயல்பட்ட இலங்கை கடற்படை மற்றும் கடலோர காவல்படையுடன் இணைக்கப்பட்ட கரையோர ரோந்துக் கப்பல்களை துரிதமாக செயற்படுத்தி அவர்களை மீட்டுள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

இதன்போது படகிலிருந்து 32 ஆண்களையும் ( படகு செலுத்திய 3 பேர் உட்பட) மற்றும் 6 பெண்களையும் விபத்திற்குள்ளான இழுவை படகில் இருந்து மீட்டு பாதுகாப்பாக கல்பிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டு வந்ததாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. (ஐ)

# காலவரையறைக்குள் பதில் இல்லையேல் நடவடிக்கை!

## தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஒக். 03

உரிய காலவரையறையினுள் பகிரங்க அதிகார சபை தகவல்களை வழங்குவதை புறக்கணித்தால் அல்லது ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு கீழ்ப்படியவில்லை என்றால் கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உலகளாவிய தகவல் அணுகலுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, இலங்கையின் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு யாழ்ப்பாண மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பத்திரிகைக் கழகங்கள் மற்றும் வட மாகாண கல்வியாளர்களுடன் இணைந்து, தொடர் கலந்துரையாடலை நடத்தியது. இதன் போதே தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் ஆணைக்குழு மற்றும் மாவட்ட செயலாளர் க.மகேசன் தலைமையில் வடமாகாண பிரதேச செயலகங்கள், அரச அதிகாரிகள் மற்றும் சமூகத்தினருடன் இணைந்து கடந்த ஐந்து வருடங்களாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட வெற்றிகள் மற்றும் சவால்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற சமூகப்பிரதிநிதிகள், தகவல் கோரிக்கையை செயல்படுத்தும் வகையில் பகிரங்க அதிகாரசபை இன்னும் திறமையாக செயற்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தும் போது, சிலபகிரங்க அதிகார சபைகளால் ஊக்கமளிக்கப்படாத நிகழ்வுகளையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

உரிய காலவரையறையினுள் பகிரங்க அதிகாரசபை தகவல்களை வழங்குவதன் முக்கியத்துவத்தை ஆணைக்குழு வலியுறுத்துகிறது. மேலும் காலவரையறையை புறக்கணித்தால் அல்லது ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு கீழ்ப்படியவில்லை என்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியது.

தகவல் அறியும் உரிமைச் செய்தியை கிராமப் புறங்களுக்கு திறம்பட எடுத்துச் செல்வதற்காக மாகாண அலுவலகங்களை நிறுவுமாறு பலர் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்தனர்.

தொடர்ந்து, வட மாகாண பத்திரிகை ஆசிரியர்கள், இதழா சிரியர் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது டன், சில அரச அலுவலகங்களில் முறையாகச் செயல்படும் தகவல் உத்தியோகத்தர்கள் இல்லை என ஊடகவியலாளர்கள் சுட்டிக் காட்டினர்.

பகிரங்க அதிகாரசபைகள் தகவல் கோரிக்கையை கவனிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை என்பதை அவர்கள் அவதானிப்பதாகவும் அது தொடர்பில் உடனடியாக இந்த விவகாரங்கள் குறித்து ஆராய ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டனர்.

அதிக எண்ணிக்கையிலான வழக்குகளில் தகவல்களை வெளியிடும் ஆணைக்குழுவின் பணியைப் பாராட்டினாலும், பகிரங்க அதிகார சபையின் தகவல கோரிக்கையை புறக்கணிக்கும் போக்குத் தொடர்ந்தால், தகவல் அறியும் சட்டம் குடிமக்களுக்கு சிறியளவிலேயே பயன்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதற்கான அனைத்து குறிப்பிட்ட நிகழ்வுகளும் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று பதிலளித்த ஆணைக்குழு, மேலும் அத்தகைய விடயங்களை ஆணைக்குழு வலுக் கட்டாயமாகவிசாரணை செய்யும் என்றுகூறியது.

வடமாகாணத்தில் தமிழ் மொழியில் தகவல்களை வெளியிடுவதில் அரசியலமைப்பின் விதிகளுக்கு இணங்க பகிரங்க அதிகார சபைகள் செயல்பட வேண்டும் எனவும், இந்தச் சந்தர்ப்பங்களில் உரிய முறையில் பதிலளிக்கத் தவறினால் ஆணைக்குழு அதனை விசாரிக்கும் விசாரணை செய்வதாகவும் எனவும் குறிப்பிடப்பட்டது. (ஐ)



# காந்தி ஜெயந்தி தினம் வடமராட்சியிலும் நிகழ்வு!

வடமராட்சி, ஒக். 03

மகாத்மா காந்தியின் 153ஆவது ஜனன தினமான நேற்று வடமராட்சியிலும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

பருத்தித்துறை நவீன சந்தையின் வடமேல் மூலையில் நிறுவப்பட்டுள்ள காந்தியின் உருவச்சிலைக்கு பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் தலைவர் யோசப் இருதயராஜா, அறவழிப் போராட்டக்குழு செயலாளர் வி ஜி தங்கவேல் ஆகியோர் மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.இந்த நிகழ்வில் பல தரப்பினரும் பங்கேற்றனர். (ஐ-02)

# பல்கலை. அனுமதிக்காக 93,000 விண்ணப்பங்கள்!

கொழும்பு, ஒக். 03

பல்கலைக்கழக அனுமதிக்காக இம்முறை சுமார் 93 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் சுமார் 45,000 மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, மருத்துவ பீடத்துக்கு 2,035 மாணவர்களும் பொறியியல் பீடத்துக்கு 2,238 மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

2021ஆம் ஆண்டின் உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 497 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# மார்பக புற்றுநோயாளர் தொகை உயர்கின்றது!

கொழும்பு, ஒக். 03

நாட்டில் நாளாந்தம் 12 பேர் வரையில் மார்பக புற்றுநோயாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர் என்று தேசிய புற்றுநோய் ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 2 தசாப்த காலங்களாக நாட்டில் மார்பக புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக விசேட மருத்துவ நிபுணர் ஹசரெலி பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

மார்பகப் புற்றுநோய் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவூட்டும் வேலைத்திட்டங்கள் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இந்த விழிப்புணர்வு திட்டம் இந்த மாதம் முழுவதும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஐ)

# போதனா மருத்துவமனையில் மோட்டார் சைக்கிள் திருட்டு!

யாழ்ப்பாணம், ஒக். 03

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இயங்கும் சிற்றுண்டி சாலைக்கு சிற் றுண்டி வழங்கும் வியாபாரி யின் மோட்டார் சைக்கிள் திருட்டு போயுள்ளது.

போதனா மருத்துவமனை வளாகத்தினுள் தனது மோட் டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, சிற்றுண்டிகளை, சிற்றுண்டி சாலைக்கு கொண்டு சென்று வழங்கி விட்டு , மோட்டார் சைக்கிள் நிறுத் தப்பட்ட இடத்துக்கு திரும்பி வந்து பார்த்த போது மோட் டார் சைக்கிள் திருடப்பட்டதை அறிந்தார்.

இது தொடர்பில் யாழ். போதனா மருத்துவமனை நிர்வாகத்திடமும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திலும் அவர் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.